விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 27 வியாழக்கிழமை (12.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சிமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# நவியை எதிர்கொள்ள இலங்கை அரசு தயார்

## - மகிந்த சமரசிங்க



*(கொழும்பு)* ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை எவ்வாறுவரினும் அந்த சவால்களை எதிர்கொள்ள இலங்கை தயாராகவே இருப்பதாக பெருந்தோட்டத்துறை அமைச்சரும், மனித உரிமைகள் கண்காணிப்பாளருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். *(20ஆம் பக்கம் பார்க்க)*

# பிரபாகரனின் பிரசாரங்களையே கூட்டமைப்பும் முன்னெடுக்கிறது

## வவுனியா கூட்டத்தில் ஜனாதிபதி



(வவுனியா)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரசாரங்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வவுனியாவில் வைத்துக் குற்றம் *(20ஆம் பக்கம் பார்க்க)*

# இலங்கையரிடம் மகிழ்ச்சி குறைவு

(லண்டன்)

ஐ.நா சபையின் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான தீர்வுகள் வலையமைப்பினால் நடத்தப்பட்ட 2013-ம் ஆண்டுக்கான உலகில் மகிழ்ச்சியாக மக்கள் வாழும் நாடுகளின் வரிசையில் இலங்கை 137-வது இடத்தைப் பெற்றுள்ளது.

அதன்படி நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான தீர்வுகள் வலையமைப்பு நாடுகளில் 156 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

# இலங்கைக்கு போர்க் கப்பலை இந்தியா வழங்கக் கூடாது

## ஜெயா கோரிக்கை

(சென்னை)

இலங்கைக்கு இந்தியா இரண்டு போர்க்கப்பல்களை வழங்க முடிவு செய்துள்ளது.

இலங்கைக்கு போர்க் கப்பல்கள் வழங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டு இருந்தால் அதனை ரத்து செய்ய வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.



இலங்கைக்கு இந்தியா 2 போர்க் கப்பல்களை வழங்க முடிவு செய்துள்ளது *(20ஆம் பக்கம் பார்க்க)*

# வீதி அபிவிருத்தி செய்வது சொந்தப் பையை நிரப்பவே

## ரணில் குற்றச்சாட்டு

(வவுனியா)

அரச தரப்பினர் தமது சொந்தப் பைகளை நிரப்பிக் கொள்வதற்காகவே,. வீதிகளை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை செய்வதற்காக வவுனியாவுக்கு நேற்றைய தினம் வருகை தந்திருந்த ஐக்கிய தேசிய கட்சியினர் நடத்திய தேர்தல் பரப்புரை கூட்டம் மதகுவைத்தகுளத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

அபிவிருத்தி பற்றி பெரியளவில் பேசுகின்ற அரசாங்கம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காண முன்வரவில்லை.

அரச தரப்பினர் தமது சொந்தப் பைகளை நிரப்பிக் கொள்வதற்காகவே, வீதிகளை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியே முன்னின்று பாடுபட்டது, ஐக்கிய தேசிய கட்சியினால்மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வு *(20ஆம் பக்கம் பார்க்க)*

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

# நள்ளிரவில் மனைவி, மகளை குத்திக் கொன்ற கொடூரம்!

## கொடிகாமத்தில் விபரீதம்



(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த தனது மனைவியையும் மகளையும் குத்திக் கொலை செய்த கொடூர சம்பவம் கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்திகில் சம்பவம் ஜே/324 கிராமசேவையாளர் பிரிவில் கொடிகாமம் கச்சாய் வீதி பிள்ளையார் கோவிலடியில் நேற்று நள்ளிரவு 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இக்கொலைச் சம்பவத்தினால் அப்பகுதி அச்சத்தில் உறைந்ததோடு தாயும் பிள்ளையும் படுக்கை இடத்திலேயே கொலை செய்யப்பட்டதனால் சம்பவ இடம் கொடூரமாகக் காட்சியளித்தது.

கொடிகாமத்தினைச் சேர்ந்த லோகேந்திரன் ஜெயமேரி (வயது - 38) என்ற 3 பிள்ளைகளின் தாயும் இவரது மூத்த மகளான *(19ஆம் பக்கம் பார்க்க)*

எம்மண், எம்மக்கள், எம்முரிமை
உங்கள் தெரிவு
க.வி.விக்னேஸ்வரன்
(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)
முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 10



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்; அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

## அறிவிக்க கோருகிறார் குணதாச

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக சிங்கள மக்களை குழப்பும் விதமான தேவையற்ற அறிக்கைகளை வெளியிடாது அரசாங்கம் தனது அதிகாரபூர்வ நிலைப்பாட்டை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி உட்பட அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக அமைதியான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருவது அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசாங்கம் ஏற்றுகொண்டுவிட்டது என்ற செய்தியை உலகத்திற்கு வழங்கியுள்ளது.

கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 157 (ஆ) ஷரத்து மீறப்பட்டுள்ளது.

இதன் ஊடாக சர்வதேசத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதே தவிர வேறொன்றுமில்லை.

வடக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்ட பிறகு மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் இடையில் இரத்தம் சிந்த வைக்கும் முயற்சியே மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் சிங்கள மக்களை குழப்பும் வார்த்தைகளை கூறிக்கொண்டிருக்காது, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உடனடியாக நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

(செ-11)

# பிரச்சினைகளிலிருந்து நழுவிச் செல்லக்கூடாது

## ஹெல உறுமயவிற்கு சுசில் அறிவுரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய கட்சி விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து விலகியமையானது அரசியல் கட்சி ஒன்றுக்கு தகுதியான செயல் அல்ல என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரச்சினைகளில் இருந்து நழுவிச் செல்லாது அதற்கு எதிராக போராட வேண்டியது அரசியல் கட்சிகளின் கடமையாகும்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மட்டும் நாடாளுமன்ற தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்படுவதில்லை.

பல முறை நாடாளுமன்ற தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றில் பங்கேற்பதற்கும், நிராகரிப்பதற்கும் எவருக்கும் உரிமை உள்ளது.

அரசியல் கட்சி ஒன்று முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை காரணமாக காட்டி நீடித்த தீர்வொன்றை காணும் சந்தர்ப்பத்தில் இருந்து நழுவிச் செல்வதை நான் ஏற்க மாட்டேன்.

ஜாதிக ஹெல உறுமய தெரிவுக்குழுவில் இருந்து விலகினாலும் தெரிவுக்குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு அந்த கட்சியின் விலகல் தடையாக இருக்காது என்றார்.

(செ-11)

# பொதுநலவாய மாநாட்டுக்கு பாதுகாப்பு அணி வராது

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு வருகைதரும் நாடுகளின் தலைவர்களுடன் மேலதிக வெளிநாட்டு பாதுகாப்பு அணி எதுவும் வராதென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கே.அமுனுகம தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜகத் ஜயசூரியவின் தலைமையிலான விசேட இலங்கை பாதுகாப்பு குழு, பாதுகாப்பு ஏற்பாடுகளை பொறுப்பேற்றுள்ளதால் வழமையான பிரத்தியேக பாதுகாப்பு ஒழுங்குமுறைக்கு அப்பால் மேலதிக பாதுகாப்பு எதிர்பார்க்கப்படமாட்டாதென அமுனுகம மேலும் தெரிவித்தார்.

முப்படைகளின் விசேட செயலணியும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் 54 தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு நவம்பர் 10 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(செ-11)

# பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு 31 பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் உள்ள 31 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப் படவுள்ளது.

கொழும்பில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் நவம்பர் 6 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கைக்கு வரும் உயர்மட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதற்காக அந்த பாடசாலைகள் பயன்படுத்தப்படும்.

றோயல் கல்லூரி, டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, மகாநாம கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி, நாலந்த கல்லூரி, தேஸ்டன் கல்லூரி, விஷாக கல்லூரி உள்ளிட்ட 31 பாடசாலைகள் மூடப் படவுள்ளன.

மூடப்படும் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் பாடங்களை பூர்த்தி செய்ய மாற்று ஏற்பாடுகள் மாநாட்டுக்கு பின்னர் செய்யப்படும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)

# அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பார்

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அவுஸ்திரேலிய பிரதமர் ரொனி அபொட் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா பிரதமருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை காலை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார். இதன்போதே பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதாக ரொனி அபொட் உறுதிப் படுத்தியுள்ளார். (செ-11)

# 30 வருடங்களிற்கு பின் வாக்குச்சாவடி

முப்பது வருடங்களுக்கு பிறகு புத்தளம் மாவட்டத்தின் பூக்குளம் மீனவ கிராமத்தில் வாக்குச்சாவடி ஏற்படுத்தப்படவுள்ளதாக புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கிங்ஸ்லி பெர்ணான்டோ தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் வடக்கு எல்லையில் இருக்கும் கடைசி கிராமம் இதுவாகும். போர் காரணமாக பூக்குளம் கிராமத்தில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்து கல்பிட்டி மற்றும் குறிஞ்சான்பிட்டி ஆகிய பகுதிகளில் தற்காலிகமாக குடியேறி வாழ்ந்து வந்தனர்.

போர் முடிவடைந்த பின்னர் அங்கு சென்று மீண்டும் குடியேறியுள்ள மக்கள் வாக்களிப்பதற்காக, இந்த வாக்குச் சாவடி அமைக்கப் படவுள்ளது.

வாக்குச்சாவடி அமைப்பது தமது வாக்குரிமையை மீண்டும் நிலை நாட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கையாக கருதுவதாக பூக்குளம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-11)

இன்றும் என்றைக்கும் உலகம் முழுவதும் இயேசு பிரானின் புனித இருதயம் போற்றப்பட்டும், ஏற்றப்பட்டும், நேசிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் இயேசு பிரானின் புனித இதயம் இரக்கம் கொள்ளட்டும். திக்கற்றவர்களுக்கு உதவுபவரான புனித ஜூட் ஆனவரே எமக்காக வேண்டிக் கொள்ளும். ஒன்பது நாட்களுக்கு இந்துப் பிரார்த்தனையைக் கூறுங்கள். உங்களது பிரார்த்தனைகள் எட்டு நாட்களுக்கு ஒன்பது நாட்கள் எடுக்கும். இந்தப் பிரார்த்தனையைப் பிரசுரிப்பதாக வாக்குத்தத்தம் எடுத்துக் கொள்ளவும். வேண்டுதல் நிறைவேற்றப்பட்டுள்ளது. நன்றி அறிந்த ஸ்தோத்திரம். எங்கள் குடும்பங்களுக்கு செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி.
(3920) அடியாள்

**ஆலய வயற்காணி ஏலம் விடுதல் (காலபோகம்) 2013/2014**

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான பெரிய பரந்தன் கிளிநொச்சி பகுதியில் அமைந்துள்ள 18 (பதினெட்டு) ஏக்கர் வயற்காணி / தந்துவ ஒப்பந்த காணி 10 (பத்து) ஏக்கருமாக மொத்தம் 28 ஏக்கர் காலபோக செய்கைக்காக எதிர்வரும் 2013.09.14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப் படவுள்ளது என்பதை சகல விவசாயிகளுக்கும் அறியத் தருகின்றோம்.

**பொருளாளர் : 077 605 9577**

(சி-4688)

**வட மாகாண சபைத் தேர்தல் -2013**
**யாழ். மாவட்டம்**




**க. கமலேந்திரன் (தோழர் கமல்)**

(யாழ். மாவட்ட அமைப்பாளர்)

X 10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)

(EC-5024)

# வைத்தியசாலைகளுக்கிடையில் ஆய்வுகூட வலையமைப்பு

(கொழும்பு)

வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட அறிக்கைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் ஆய்வுகூட வலையமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. சுகாதார அமைச்சும் மொபிட்டல் நிறுவனமும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும். இது தொடர்பான பேச்சுவார்த்தை சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தற்போது பிரதான வைத்தியசாலைகளிலும் சில பெரியாஸ்பத்திரிகளிலும் மட்டுமே மருத்துவ இரசாயன கூட சேவை வசதிகள் உள்ளன.

இரத்தம், சிறுநீர் மாதிரிகளை இரசாயன கூடங்களுக்கு அனுப்பிய பின் அவை பற்றிய அறிக்கைகளை வலைப்பின்னல் மூலம் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைக்கு துரிதமாக அனுப்புவதே புதிய ஏற்பாடாகும்.

இதில் ஒரு பிரதி நோயாளிக்கோ அல்லது நோயாளரின் பாதுகாவலருக்கோ கையடக்கத் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும்.

இதன் முதற்கட்ட வேலைத்திட்டத்தை பொலனறுவை, பதுளை பெரியாஸ்பத்திரிகளில் அமுல்படுத்தவும் பின்னர் ஏனைய வைத்தியசாலைகளுக்கு விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித்தார். (அ-2)


வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ். மாவட்டம்
இளைஞர் அமைப்பு
சுயேட்சைக்குழு - 01

அன்ரனி
( தலைவர் )
(முதன்மை வேட்பாளர்)
X 2
(E-038)
புறப்படுவோம் இளைஞர் அணியுடன்
எங்கும் செல்வோம் பந்தில் வெல்வோம்.
– எமது அணியை வெல்லச் செய்யுங்கள் –

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
சுயேட்சைக் குழு 3

மீண்டும் வெற்றி இலக்கை நோக்கி உங்கள்....
நல்லைநாதன்
திரிலோகநாதன் (லோகன்)
(முதன்மை வேட்பாளர்)
(E/040)
Post Box X 10
- தேர்தல் வந்தவுடன்தான் சிலருக்கு கோயில்களைத் தெரிகின்றது
- தேர்தல் வந்தவுடன்தான் சிலருக்கு சேதமடைந்த வீதிகளைத் தெரியும்.
- மக்களுக்குத் தேவையான நேரத்தில் மக்களிடம் சென்று சேவை செய்தவர்கள் யார்?
- 21 ஆம் திகதிக்குப் பின்பு வெளிநாடு செல்லப்போபவர்கள் யார்?
- தேர்தல் முடிந்தபின்பு தொலைபேசிகளைத் துண்டித்துவிட்டு இருப்பவர்கள் யார் என்பது தெரிந்துவிட்டது

ஆகவே உங்களுக்கு சேவை செய்தவன் என்ற உரிமையில் மீண்டும் உங்களுக்காக சேவை செய்ய எனது சின்னம் தபாற்பெட்டிக்கும் இலக்கம் 10 இற்கும் வாக்குகளை அள்ளிப்போட்டு வெற்றியடையச் செய்யுங்கள்.

வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்

60 வருட கால
சுயநலமற்ற அரசியல்
அனுபவத்தை
மீண்டும் பெற்றிட....
வீ.ஆனந்தசங்கரி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(CE/5017)

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

ஐக்கிய இலங்கைக்குள்
அதிகாரப் பகிர்வு கண்டிட
அபிவிருத்தியுடன்
சமாதானம் ஒன்றாய் பெற்றிட
உங்கள் தெரிவு
X 11
(EC/5022)
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்
குமாரு சர்வானந்தன் (சர்வா)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(கிளிநொச்சி மாவட்டம்)
இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 3
டாக்டர் கந்தசாமி
திருலோகமூர்த்தி
தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்
(EC/5023)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்


எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்
5
ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)
ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித் தலைவர்) (E-019)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5

வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013
யாழ்.மாவட்டம்

எமது நிலம் எமக்கு வேண்டும்!
எமது கடல் எமக்கு வேண்டும்!!
எம்.கே.சிவாஜிலிங்கம்
9
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X
1 2 3 4 5 6 7 8 9 10
11 12 13 14 15 16 17 18 19
(E-011)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத்
தேர்தல் 2013

X 4
எனது வெற்றி
உங்கள் வெற்றி..!
உங்கள் வெற்றி, உங்கள் சந்ததியின் வெற்றி
நம்பிக்கைக்குரிய தெரிவு
அண்ணன்
சிராஸ்
உங்கள் குரல்! எனது செயல்...!
www.voiceofseeras.com
(EC/5019)

# இன்று ஒரு தகவல்

## அவசரம் தேவையா?

ஓர் ஊரில் இரண்டு துறவிகள் இருந்தார்களாம். அதில் ஒருவர் வயதானவர். இன்னொருவர் இளம் துறவி.

அவர்களிருவரும் ஒருநாள் நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

குறுக்கே ஓர் ஆறு இருந்தது. அதைக் கடந்துதான் அந்தப் பக்கம் போக வேண்டும்.

அதற்குப் பின் சிறிது தூரம் நடக்க வேண்டும்.

ஆற்றைக் கடப்பதற்கு படகு இருந்தது. அதில் ஏறி உட்கார்ந்தார்கள்.

"ஐயா... நீங்கள் இரண்டு பேரும் எங்கே போகிறீர்கள்?" என்று படகோட்டி கேட்டான்.

"இந்தப் பள்ளத்தாக்குக்கு அந்தப் பக்கம் இருக்கும் நகரத்துக்குப் போக வேண்டும்" என்றனர்.

"அப்படியானால் நீங்கள் கொஞ்சம் மெதுவாக போவதுதான் நல்லது" என்றார்.

இதற்கு அந்தப் பெரிய துறவி சொன்னார்.

"நீ சொல்வது சரியாகாது. நீ சொல்வது போல் நாங்கள் மெதுவாகப் போனால் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைய முடியாது"

"ஏன்?"

"ஏனெனில் அங்கே ஒரு நடைமுறை உண்டு. சூரியன் மறைவதற்குள் போனால்தான் அந்த நகரத்துக்குள் போக முடியும். இல்லையெனில் போக முடியாது. அதன்பின் அந்த நகரத்தின் வாசல்களை அடைத்து விடுவார்கள். விடியும் வரைக்கும் வெளியே காத்திருக்க வேண்டும். அது ஆபத்தானது. அதனால் நாங்கள் வேகமாகப் போவது தான் நல்லது.

இப்பொழுது அந்தப் படகோட்டி சொன்னான்.

"ஐயா... நீங்கள் சொல்வது சரிதான். இருந்தாலும் என்னுடைய அனுபவம் என்னவென்றால்... யார் மெதுவாகப் போகிறார்களோ அவர்கள்தான் போய்ச்சேர வேண்டிய இடத்தை அடைய முடியும்"

மற்றைய துறவி இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் சொன்னார்.

"இந்தப் படகோட்டிக்கு இந்த விடயத்தில் நம்மை விட அவனுக்கு அனுபவம் அதிகம். அதனால் அவன் சொல்லும் யோசனைப்படி நடப்பது தான் நல்லது" என்றார்.

பெரிய துறவி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. படகு அடுத்த கரையை அடைந்தது.

பெரிய துறவி படகை விட்டு இறங்கியதும் வேகமாக அந்த நகரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? இளம் துறவி சரியான நேரத்துக்குள் அங்கு போய்ச் சேர்ந்து விட்டார்.

பெரிய துறவி வாசலுக்கு வெளியே வந்து கிடந்தார்.

உடம்பெல்லாம் காயம்.

படகோட்டி அங்கே வந்தான்.

பெரியவரைப் பார்த்து "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"நீ சொன்னபடி தான் ஆச்சு" என்றார்.

அந்தப் பாதை கரடு முரடானது. மேடும் பள்ளமும் அதிகம். கல்லும் முள்ளும் அதிகம்.

பெரியவர் வேகமாக ஓடியதால் பல இடங்களில் தடுமாறிக் கீழே விழுந்தார்.

அவர் முதுகில் நிறைய வேத நூல்கள் எல்லாம் சுமந்து கொண்டு போனார். அவையெல்லாம் கீழே விழுந்தது. அவற்றையெல்லாம் எடுத்துக்கட்டி முதுகில் வைத்துக் கொண்டு போவதற்குள் நேரமாகி விட்டது. படகோட்டி சொன்னான்.

"ஐயா! எப்பொழுதும் இப்படித்தான் ஆகும்" என்று சொல்லிவிட்டு அவன் போய் விட்டான். இது ஒரு ஸென் கதையாம். கதை சாதாரணமாகத் தான் தெரிகிறது.

ஆனாலும் அது சொல்லவரும் கருத்து என்ன தெரியுமா? வாழ்க்கை என்ற பாதையில் நிதானமாகப் பயணம் செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் அடைய வேண்டிய இடம் என்று அங்கே எதுவும் இல்லை.

அந்த இடம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

நீங்கள் அவசரப்படாமல் இருக்கும் போதுதான் அந்த இடத்தை நீங்கள் உணர முடியும். நீங்கள் அவசரப்பட்டால் அந்த இடத்தை உணரமுடியாது.

இந்தக் கதையை மேம்போக்காகப் பார்க்கும் போது எல்லா விடயத்திலும் நிதானத்தைக் கடைப்பிடித்தால் இந்த உலகத்தில் வாழ முடியுமா?

"நேரம் மிக முக்கியமில்லையா?" என்று கேட்கத் தோன்றும்.

இந்தக் கதையின் அறிவுரை வெளிப்புற உலகத்துக்காக அல்ல. உள்ளேயிருக்கும் உலகத்துக்காக உள்முகப் பயணம் போகிறவர்களுக்கு அவசரம் கூடாது அவ்வளவு தான்.

இன்றைய புற உலக வாழ்க்கைக்கு நேரம் மிக முக்கியமாகி விட்டது. எதையும் சீக்கிரம் முடிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பேச்சாளர் இருந்தார். அவரிடம் ஒரு பழக்கம்.

அரை மணி நேரம் தான் பேசுவார். அவ்வளவு தான். அதற்காக ஒரு தொழில்நுட்பம் வைத்திருந்தார்.

பேச ஆரம்பிக்கும் போது ஒரு இருமல் மாத்திரையை வாயில் போட்டுக் கொள்வார். அது அரை மணி நேரத்தில் கரைந்து விடும். அதுதான் அடையாளம். அத்துடன் பேச்சை முடித்துக் கொள்வார்.

ஒரு தடவை பேச ஆரம்பிக்கும்போது கோட்டுப் பையில் கையை விட்டு எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

பேச ஆரம்பித்தவர் இரண்டு மணி நேரமாக நிறுத்தவில்லை. அவருக்கே சந்தேகம் வந்தது. ஒரு கட்டத்தில் வாயிலிருந்த இருமல் மாத்திரையை எடுத்துப் பார்த்தார். அப்பொழுதுதான் புரிந்தது. அது இருமல் மாத்திரை இல்லை. அவருடைய கோட்டுப் பொத்தான் என்பது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தால் மீண்டும் இரத்தக்களறி ஏற்படும்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல்விஞ்ஞாபனம்வட்டுக்கோட்டை தீர்மானத்தை பிரதிபலிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இனவாதத்தைத் தூண்டி விட்டு தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு சயனைட் வில்லைகளைக் கொடுத்து வடக்கை மீண்டும் கலவர பூமியாக்க கூட்டமைப்பு முயற்சிக்கக்கூடாது என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல்விஞ்ஞாபனத்தின் மூலம் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதால் வடக்கிற்கோ நாட்டிற்கோ எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை. எவ்வாறாயினும் வடக்கில் இனவாத, பிரிவினைவாத கொள்கைகளை பரப்பும் குழுக்களுக்கு எதிராக பொது மக்கள் வாக்களிக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கு விரல் நீட்டும் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட ஏனைய தரப்பினர் முப்பதாண்டு கால யுத்தத்தின் போது புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை ஞாபகபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகையில்,

சர்வதேச நாடுகள் வடமாகாண சபை தேர்தல் தொடர்பில் கூடிய அவதானம்செலுத்தியுள்ளன.

அதேபோன்று பல குழுக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து கொண்டு இலங்கைக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அரச ஊழியர்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றன.

வடக்கில் ஆளும் கட்சி உண்மையைக் கூறி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்தப்படுகின்றது. 30ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அமைதியாக்கி வடக்கு மக்களுக்கு அனைத்து அடிப்படை உதவிகளையும் அரசாங்கம் செய்துள்ளது.

இன்னமும் 1971 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை பிரகடனத்திலேயே கூட்டமைப்பு தங்கியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைக்காக அனைத்தையும் காட்டிக் கொடுக்க கூட்டமைப்பு முயற் சிக்கக்கூடாது. இனவாதத்தை தூண்டி வடக்கில் இளைஞர் யுவதிகளை தூண்டி விட்டு அங்கு மீண்டும் கலவரத்தை ஏற்படுத்த கூட்டமைப்பு முயற்சிக்கக்கூடாது.

2006 ஆம் ஆண்டு ஒஸ்லோ தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தான் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்ததாக கூட்டமைப்பு கூறுவது வேடிக்கையாக உள்ளது.

ஏனென்றால் 2009ஆம் ஆண்டின் அனைத்து கேள்விகளுக்கும் அரசாங்கம் பதிலளித்து தற்போது புதிய நோக்குடன் செயற்படுகின்றது எனக் கூறினார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டுக்கு பாதுகாப்புஅணி வராது-அமுனுகம

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு வருகை தரும் நாடுகளின் தலைவர்களுடன் மேலதிக வெளிநாட்டு பாதுகாப்பு அணி எதுவும் வராதென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கே.அமுனுகம தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜகத் ஜயசூரியவின் தலைமையிலான விசேட இலங்கை பாதுகாப்பு குழு பாதுகாப்பு ஏற்பாடுகளை பொறுப்பேற்றுள்ளதால் வழமையான பிரத்தியேக பாதுகாப்பு ஒழுங்குமுறைக்கு அப்பால் மேலதிக பாதுகாப்பு எதிர்பார்க்கப்பட மாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

முப்படைகளின் விசேட செயலணியும் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடுகளில் கலந்து கொள்ள 54 தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 | 100 |
| தக்காளி | 80 | 80 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 100 | 120 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 120-140 | 140-180 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 60 | 140 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 60 | 100 | 120 |
| பீற்றூட் | 10 | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 30 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 120 | 110 | 100 | 100 |
| கீரை – 1 பிடி | 10 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 500 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 | 35-45 |
| இராசவள்ளி | 100 | 70 | 120 | – |

# இராசி பலன்

12.09.2013
(ஆவணி 27, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சப்தமி முற்பகல் 10.27மணிவரை
அட்டமி முற்பகல் 10.28 மணி தொடக்கம்
அனுசம் காலை 6.20 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.51 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை

**மேடம்** அம்பிகையை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், விரயங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், சத்துரு ஜெயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், தேவையற்ற பயம் ஏற்படலாம்.

**கன்னி** நீண்ட நாளைய பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள், உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், கைமாற்றாக கொடுத்த பணம் திரும்பி வரலாம், அந்நியர் சந்திப்புண்டு.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் கைகூடும், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**மகரம்** பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவுதர முன்வருவர், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், உடல் நலம் சீராகும், ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

# முதுகல்விமாணி மற்றும் முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2013/2014 ஆம் கல்வியாண்டில் முதுகல்விமாணி மற்றும் முதுகலைமாணி (தமிழ்) ஆகிய கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் நேற்று வெளியாகியது.

முதுகல்விமாணி கற்கை நெறிக்கு 103 பேரும் முதுகலைமாணி (தமிழ்) கற்கை நெறிக்கு 50 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**முதுகல்விமாணி**

வணபிதா அன்ரன் தேவதாசன் அமீர்தா, திருமதி குகானந்தம் அருட்செல்வி, திருமதி முகுந்தன் அருந்ததி, சொடலமுத்து அசோக்குமார், வாரிதம்பி பாலசந்திரன், வரதராஜன் பாலமுரளி, சின்னையா பாலமுருகன், குமாரசாமி பாலமுருகன், சூசையப்பு புறுனோதாஸ், மொஹமட் ஹரீம் கிரேஸ்சலி, திருமதி இளங்கோ சந்திரா, திருமதி ஜஸ்ரின் பிறின்ஸ்லி கிறிஸ்டபெல், ஜேசுதாசன் கிறிஸ்ரின் டிலானி, குணசேகரம் கிறிஸ்துநேசன் மெல்வின் குரூஸ், மகேந்திரநாதன் ஈஸ்வரதாஸ், வேதநாயகம் கணேசலிங்கம், செல்வவிநாயகம் கணேசதாஸ், திருமதி ரகு கௌசலாதேவி, சின்னையா ஜெகன், பாலசிங்கம் ஜெகன், செல்வராஜா ஜெகநாதன், திருமதி சுகந்தராஜ் ஜெனித்தா ஜெயந்தினி, தம்பையா ஜெயகுமாரி, சுப்பிரமணியம் ஜெயாநந்தகுமார், மயில்வாகனம் ஜெயரூபன், திருமதி கருணாநந்தன் ஜெயரூபி, அந்தோனிப்பிள்ளை ஜோன் கொலின், மகாதேவன் ஜோகின் கலிஸ்ரஸ், குமாரவேலு ஜோதிரட்ணராஜா, டொமினிக் ஜுடிஸ்கிங், திருமதி சுகந்தன் கலைவாணி, செல்லத்தம்பி கலையரசன், கந்தையா கலியுகன், திருமதி வசீகரன் கல்யாணி, கார்த்திகேசன் கமலநாதன், திருமதி கிருஷ்ணசிங்கம் கணகேஸ்வரி, நடராஜா காண்டீபன், சித்திரவேல் கணேசன், இரத்தினம் கருணா, குமாரசாமி கிரிதரன், ஜெயரஞ்சன் குமுதினி, இரத்தினகுமார் குபேசன், திருமதி சுகந்தன் லாவண்யா, ஆரியபுத்திரன் லிங்கராஜ், சிவனாந்ததாஸ் லிங்காதரன், திருஞானம் லின்ரஸ், மயில்வாகனம் மகேந்திரன், திருமதி ஜூட் குரொஸ்மேரி லியோனி, கஸ்பர் மதுரநாயகம், குமாரசிங்கம் முல்லைக்குமார், மகாலிங்கசிவம் முரளீதரன், உலகநாதப்பிள்ளை முரளி, இராசையா நாக நாதன், திருமதி இராசலிங்கம் நாகறோகினி, திருமதி கேதீசன் நளிந்தினி, வேலும்மயிலும் நந்தகுமார், திருமதி பரமேஸ்வரன் நர்மதா, நாகவர்த்தம்பி நஸ்முதீன், சிவானந்தன் நவகாந்தன், திருமதி ராஜகுமார் நவமணி, அமிர்தலிங்கம் நிரூபராணி, திருமதி செவ்வேள் நிசாந்தினி, கணபதிப்பிள்ளை நித்தியானந்தன், சூசைப்பிள்ளை நோபேட் உதயகுமார், கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன், பரஞ்சோதி பரணீதரன், திருமதி தேவா பற்றீசியா, சவிரி பூலோகராஜா, பதியுதீன் ரவி அஸ்லாம், திருமதி பிரதீபன் ரஜனி, திருமதி தயாபரன் ரஜனி, பரராஜசிங்கம் ராஜேஸ்வரன், நடராஜா ராமதாஸ், சின்னத்துரை ராதாகிருஷ்ணன், திருமதி ஜெயதாஸ் சாம்பவி, திருமதி கருணாகரன் சஞ்சுலா, நாகலிங்கம் சதீஸ்கரன், கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம், திருமதி சத்தியமூர்த்தி சரஸ்வதி, சபாரட்ணம் சரவணபவன், திருமதி மணிசேகரன் செல்வமாலினி; திருமதி சந்திரபவன் சர்மிளா ஜெயந்தினி, திருமதி குகநேசன் சீவை, திருமதி திலகநாதன் சிவாஜினி, கணேசபிள்ளை சிவகரன், சின்னத்தம்பி சிவகரன், தம்பிராஜா சிவகுமார், அழகேந்திரராஜா சுபாகரன், திருமதி ரமேஸ் சுதா, திருமதி அரசரத்தினம் சுவேந்திரா, ரஸாக் முஹமட் தரீக், திருமதி ரவிகரன் உமாவதி, சிவப்பிரகாசம் உதயகுமார், நாகராஜ் உதயகுமார், சண்முகம் உதயநாதன், திருமதி கதிர்காமலிங்கம் வானதி, சிங்கராஜா வசந்தரூபன், திருமதி ரவிராஜன் வாசுகி, திருமதி குகேந்திரன் வாசுகி, பாலசிங்கம் வாசுதேவன், திருமதி தில்லைச்செல்வன் வதனி, அம்பலம் விஜயானந்தன், ராஜரத்தினம் விஜயதீபன்

**காத்திருப்போர் பட்டியல்**

பரமநாதர் சிவஞானசம்பந்தன், ராஜரத்தினம் ராஜ்பிரகாஷ், யோகானந்தம் ஜெகானந்தம், திருமதி தேவராஜ் மைதிலி, சோமசுந்தரம் முகுந்தன், திருமதி பியந்தன் செரினி, வேர்ஜினியா முஹமட் முகைதீன் நாசர்தின், திருமதி சோமசேகரம் வளர்மதி, நடராஜா விமலகுமார்.

**முதுகலைமாணி (தமிழ்)**

நற்குணராஜா அகிலன், குமாரசாமி அகிலன், அருமைத்துரை அன்ரன் தயஸ், தணிகாசலம் டேவிட் ஜிஸ்காட், நைவலா அப்புகாமி லெச் தம்மிக ஜெயசிங்க, வணபிதா ஜசாக் டானியஸ் டிக்சன், சிதம்பரநாதன் இளந்திரையன், திருமதி நாகராஜ் கௌசிகா, குணரட்னே குணருபேஸ், வண.யோசப் வில்லியம் யோகராஜ், திருமதி ரஜீவன் கலாராணி, கந்தசாமி கீர்த்திராஜன், திருமதி சண்முகரத்தினம் கிரியா, சோமபாலா ஜிம் பிரவுன் கிருபாகரன், திருமதி ரகுநாதன் குணேஸ்வரி, குலவீரசிங்கம் குருபரன், திருமதி பத்மநாதன் லதா, திருமதி பத்மாகரன் லதீஸ்வரி, திருமதி பகீரதன் லயந்தினி, தவராஜா மோகனராஜ், கணபதிப்பிள்ளை நடேஸ்வரன், கிருஷ்ணப்பிள்ளை நவநீதன், நாகேந்திரம் நவராஜ், திருமதி சுதர்சன் நிர்மலா, திருமதி சீபாஸ் ஜஸ்ரின்ராஜ் நிஷாந்தினி, கணேசராஜா பிரகாஷினி, ஆறுமுகம் ராஜபாலசிங்கம், கதிர்காமதையன் ரஜனிகாந்தன், செல்வராஜா ராஜேஸ்வரன், துரைசிங்கம் சர்வேந்திரகுமார், திருமதி சிவகுமாரன் சத்தியலோகினி, கந்தையா செல்லக்குமார், மார்க்கண்டு செல்வதாஸ், திருமதி குணேந்திரன் சிவாமினி, நடராஜா சிவானந்தன், நாகலிங்கம் சிவசிதம்பரம், சிவசோதி சிவமலர், முருகேசு சுகந்தினி, திருமதி சண்முகேந்திரன் சுகுணராணி, திருமதி ஜீவபாபு சுகன்யா, திருமதி டினேஸ் தனுஜா, சிவபாலன் தர்சினி, வனபசுபதி தேவமிதிரன், கைலாயநாதன் துஷ்யந்தன், கோணலிங்கம் உதயகுமார், திருமதி நவதீசன் உதயலதா, சபாபதி உதயணன், கனகரட்ணம் வசந்தரூபன், பாலசிங்கம் விக்னேஸ்வரன், ஜீவரத்தினம் விஜயகாந்தன்.



# அரியாலை கிழக்கிற்கு மின்சார விநியோகம்

(பருத்தித்துறை)


**வடக்கின் வசந்தம்** திட்டத்தினூடாக அரியாலை கிழக்குப் பகுதி மக்களுக்கு நேற்று காலை 8.30 மணி முதல் மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கிராமம் இராணுவ கட்டுப்பாட்டின் கீழிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உறுப்பினர் வ.சிறிகணேசாவின் முயற்சியை அடுத்து மின் விநியோகம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக நூறு குடும்பங்கள் வரை மின்சாரத்தைப் பெற்று பயனடைந்துள்ளனர். இம் மின்சார விநியோக நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாஸ் மற்றும் மின்சார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-9-10)




# அவுஸ்திரேலிய தூதுவர் றொபின் மூடி பல்வேறு தரப்பினரை சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நிலவரம் தொடர்பாக ஆராயும் நோக்குடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மூடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் மற்றும் வட மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் ஆகியோரை பிற்பகல் 3 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

பின்னர் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் மாலை 4 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

அதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.எம். சுவாமிநாதன்,ரவிகருணா நாயக்க, ஐ.தே.கவின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் தியாகராஜா துவாரகேஸ்வரன் ஆகியோருடன் யாழ்.ஆனைப்பந்தி பகுதியிலுள்ள துவாரகேஸ்வரனின் இல்லத்தில் மாலை 6 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர் நேற்றுக் முற்பகல் 10 மணி யள்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் அக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களையும் யாழ்.மாட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஐ.தே.க. மற்றும் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் வடக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னம், தேர்தலில் இராணுவத் தலையீடு, அடக்கு முறைகள் தொடர்பாகவும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் தெரியப்படுத்தியதாக கூறப்படுகின்றது. (அ-6)

# த.தே.கூட்டமைப்பின் பிரசார கூட்டம்

(கரவெட்டி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டமும் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் இன்று அராலி மாவத்தை விளையாட்டுக்கழக அரங்கில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், த.சித்தார்த்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

அத்துடன் யாழ்.மாவட்ட வேட்பாளர்கள், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்திலும் யாழ். மாநகர சபை உறுப்பினர் ஜேக்கப் தலைமையில் பிரசாரக்கூட்டம் நடைபெறவுள்ளது. (அ-9-24)

# கசிப்பு வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

கரவெட்டி துன்னாலை கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பெண்ணொருவர் 180 லீற்றர் கசிப்புடன் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப் பகுதியில் கசிப்பு விற்பனை இடம் பெற்று வருவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்ற பொலிஸார் 180 லீற்றர் கசிப்பை தனது வீட்டில் வைத்திருந்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

இவரை நாளைய தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தவுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் ஏற்கனவே கசிப்பு தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தியவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-60)

# தற்காலிக அ.அட்டைக்கு விண்ணப்பியுங்கள்

(யாழ்ப்பாணம்)


தேசிய அடையாள அட்டையை பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களை தற்காலிக அடையாள அட்டையையும் பெற்றுக் கொள்வதற்கான வடிக்கையை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் போது, தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை தமது கிராம சேவையாளர் ஊடாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்.

மேலும் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் கடவுச் சீட்டு, நடைமுறையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை போன்றவற்றை கால நீடிப்பு செய்து எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# முதலாவது மின் தகன இந்துமயானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மின் தகன இந்துமாயானம் நேற்று வண்ணார் பண்ணையில் ஆறு கால் மடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை மற்றும் வடமாகாண சபையினால் 22 மில்லியன் ரூபா செலவில் யாழ்.கோம்பயன்மணல் மயானத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின் தகன மயானத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதன் உட்பட மாநகர சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-4)

# அத்துமீறும் மீனவர்களின் படகுகள் அரசுடைமையாகும்

## நீரியல் வள அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகளை அரச உடைமை யாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப் பில் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்கும் நோக் கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் கடற்றொழில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகை யில்,

குறிப்பாக இந்திய மீனவர்கள் வடக்கு , புத்தளம் மற்றும் கற்பிட்டி போன்ற கடற்பரப் புக்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை தவிர்ப்பதற்கு மீனவர்களுடனான பேச்சு வார்த்தைகள் போதுமான தீர்வாக அமைய வில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சட்டமா அதிபர், வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட பல முக்கிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய தன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

கட்டுவன் தெற்கு நாச்சிமார் ஆலய அலங் கார உற்சவத்தை முன்னிட்டு இடம்பெறும் சொற்பொழிவு கடந்த 7 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தினமும் பிற் பகல் 5 மணிக்கு நடைபெற்று வருகின்றது.

சேக்கிழார் அருளிய பெரியபுராணம் என்ற கருப்பொருளில் இடம்பெற்று வரும் இத் தொடர் சொற்பொழிவை யாழ் நகர மேற்கு சமுர்த்தி வங்கியின் உதவி முகா மையாளர் சொல்லருவி த.கருணாகரன் வழங்கி வருகிறார். (அ-5)

# முதலாவது பொப்பி மலர் ஜனாதிபதிக்கு அணிவிப்பு

முதலாவது பொப்பிமலர் ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக் கான பொப்பிமலர் மாத ஆரம்பத்தை முன் னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு முதலாவது பொப்பி மலரை அணிவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளி கையில் நடைபெற்றது.

சேவாமுக்த சங்கத்தின் தலைவர் பெட்ரிக் ஜயசிங்க முதலாவது மலரை ஜனாதிபதிக்கு அணிவித்தார்.

1947 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பொப்பி மலர் மாதம் கொண்டாடப்பட்டாலும் 1921 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதியே இது முதன்முதலில் ஆரம்பமானது.

உலக மகா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இப் பொப்பி மலர் திட்டம் சர்வதேச ரீதியாக 92 ஆவது தடவையாக நடைபெறுகின்றது. (அ-2)

# கொரியாவின் உதவியுடன் பெண்களுக்கு சுயதொழில்

சுயதொழிலை ஊக்குவித்து பெண்களை பொருளாதார ரீதியில் வலிமைப்படுத்தும் நோக்கில் கொரிய சர்வதேச உதவி அமைப்பு (Koica) சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுடன் இணைந்து புதிய வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மதவாச்சி பிரதேச பிரிவைச் சேர்ந்த 20 பெண்களுக்கு 15 இலட்சம் பெறுமதியான தையல் இயந்திரங் கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையில் மதவாச்சி பிரதேச செயலக த்தில் நடைபெற்றது.

சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவு மற்றும் மதவாச்சி பிரதேச செயலகத்தின் அனுச ரணை மற்றும் பங்களிப்புடன் இப்பெண்க ளுக்கு பை தைக்கும் பயிற்சி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

அப்பயிற்சியில் பலன்பெறும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலும் இப்பெண்களுக்கு மேலதிக பயிற்சி களை வழங்குதல் மற்றும் சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல் என்பவற்றுடன் வியாபார த்தை விரிவுபடுத்த விநியோகஸ்தர்களை அறி முகம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது. (அ-2)

# பதற்றத்தை தணிக்க தேசிய திட்டமாம்

(கொழும்பு)

இலங்கையின் அனைத்து மதங்களுக்கு மிடையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணி க்க தேசிய திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள் ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தம்மாதீப சபை எனும் அமைப்பே இதனை அறிவித் துள்ளது.

மூன்று நிக்காயாக்களின் மகாநாயக்கர் கள் தலதா மாளிகையின் தியவதன நிலமே ஆகியோர் உள்ளிட்ட வகையில் இந்த சபை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சபை நாடு முழு வதும் பயங்கரவாத நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டு வன்முறையற்ற நிலை ஏற்படுத்தப் பட வேண்டும் என்று பிரசாரம் செய்யப் போவ தாக சபையின் உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசாங்கம் பௌத்த மதத்தின் சில துறவிகள் இந்த பிரச்சினைக்கு தீர்வை காண முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ-2)

## கர்ம விமோசன வேண்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம்ஸ்ரீஅம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த் தனை மையத்தினால் நடத்தப்படும் அம்மா பகவானுக்கு கர்ம விமோசன வேண் டல் நிகழ்வு எதிர்வ ரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்ப கல் 3 மணிக்கு பிரார் த்தனை மையத்தில் நடைபெறவுள் ளது. (அ-5)

# இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

தொழில்நுட்பவியல் கல்லூரியின் டிசெம்பர் மாத இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்ப ங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் தெரி வித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மீள் பரீட்சார்த்திகள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் பரீட்சைப் பகுதி யில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பரீட் சைக் கட்டணத்தை வங்கியில் செலுத்தி பற் றுச் சீட்டுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பப் படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரியின் பரீட்சைப் பகுதிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண் டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த ஓகஸ்ட் மாதம் இறுதிப் பரீட்சையில் தோற்ற இருந்த மீள் பரீட்சார்த்தி களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடி யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பரீட்சைப் பகுதி, தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரி யில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடி யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம்
ஜனநாயக ஐக்கிய முன்னணி
இரட்டை இலை
X 4
நீங்கள் அதிகாரத்தை தரும் பட்சத்தில் தவறாது, தயங்காது பொறுப்பை நிறைவேற்றுவேன்
ஆசிரியர், பிரபல எழுத்தாளர், வெளியீட்டாளர் உலக தமிழ் மொழி இலத்திரனியல் கருவியின் ஆலோசகர் திருக்குறளை தமிழ் மக்கள் மத்தியில் அழியாது மறவாதிருக்க அதன் கருத்துக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இறுவெட்டில் வெளியிட்டவர்.
(E/039) A.M.K.தில்லைமோகன் (OMOS)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
வல்லிபுரம் கமலேஸ்வரன்
(தலைவர், இலங்கைத் தமிழசுரக் கட்சி முல்லை மாவட்டம்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
உண்மைக்கு குரல் கொடுத்து
உரிமைகளை வென்றெடுப்போம்
தன்மானம் உள்ள தமிழனாய்
தலை நிமிர்ந்து நின்றிடுவோம்
அதற்காய்
உங்கள் தெரிவு.....
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 7








மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தடைகளைத் தாண்டி
உரிமைகளை வென்றிட
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு
அரசியல் விஞ்ஞான கலாநிதி
க.சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
இலங்கைத் தமிழரசுக்கட்சி
X 4
(EC/5021)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



# சிறுவர் அரங்கம்

574

## எறும்பு சாப்பிடுகிறது!



சித்தனூரில் இனிப்புக்கடை ஒன்று இருந்தது. சிறுவர்கள் அந்தக் கடையில் இனிப்பு வாங்கிச் சாப்பிடுவர். அந்தக் கடைக்காரக் கிழவனுக்கு சிறுவர்களைக் கண்டால் பிடிக்காது. அவர்கள் மீது எரிந்து விழுவான். அவர்களால் ஏதேனும் வேலையாக வேண்டியிருந்தால் அவர்களை அழைப்பான். இந்த வேலையை முடியுங்கள். இனிப்புத் தருகிறேன் என்பான். அவர்கள் அதைச் செய்து முடித்ததும் இனிப்புத் தரமாட்டான். மாறாக அவர்களை விரட்டிவிடுவான். இதனால் சிறுவர்களுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. நண்பகல் நேரத்தில் கடைக்குள் படுத்துத் தூங்குவான். சிறுவனாக இருந்த அவன் மகன் அப்போதுதான் கடையைப் பார்த்துக் கொள்வான்.

ஒரு முறை அந்தக் கடைக்காரன் மட்பாண்டம் செய்பவர்களிடம் சென்றான். பலகாரங்கள் வைப்பதற்காக வாய் அகன்ற பானைகள் முப்பது செய்ய வேண்டும்.எப்போது செய்து தருவீர்கள்? என்று கேட்டான். ஒருவாரத்தில் தயாராகி விடும் என்றனர். குறிப்பிட்ட நாள் வந்தது அந்தப் பானைகளை கடைக்குள் எடுத்து வரவேண்டுமே என்ன செய்வது என்று சிந்தித்தான் கடைக்காரன். வழக்கம்போல சிறுவர்களை ஏமாற்றுவோம் என்று நினைத்தான். சிறுவர்களை அழைத்த அவன் மட்பாண்டம் செய்த அவர்களிடம் முப்பது பானைகள் உள்ளன. அவற்றைக் கவனமாக எடுத்து வரவேண்டும். எடுத்து வருகிறீர்களா? என்று கேட்டான்.

அப்படி நாங்கள் எடுத்து வந்தால் எல்லோருக்கும் நிறைய இனிப்புத் தருவீர்களா? என்று கேட்டான் அவர்களில் ஒருவன். கொண்டு வாருங்கள் பிற்கு பார்க்கலாம் என்றான் கடைக்காரன். நிறைய இனிப்புக் கிடைக்கப்போகிறது என்று மகிழ்ச்சிஆரவாரம் செய்தனர் சிறுவர்கள்.


ஒவ்வொரு பானையாக அவர்கள் கடைக்கு கொண்டுவந்தனர். எல்லாப் பானைகளும் வந்து சேர்ந்தன. எங்களுக்குத் தருவதாகச் சொன்ன இனிப்பைத் தாருங்கள். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டே செல்கிறோம் என்றனர் சிறுவர்கள். நான் எப்போது உங்களுக்கு இனிப்புத் தருவதாகச் சொன்னேன்? நீங்கள் கேட்டதற்கு கொண்டு வாருங்கள் பிறகு பார்க்கலாம் என்றுதானே சொன்னேன். இப்போதும் அதேதான் சொல்கிறேன்.

பிறகு பார்க்கலாம் என்று அவர்களை விரட்டினான் கடைக்காரன். தாங்கள் ஏமாந்து விட்டதை எண்ணி புலம்பியபடியே அங்கிருந்து சென்றனர் சிறுவர்கள். அந்த வழியாக வந்த கோபால் ஏன் அழுது கொண்டே செல்கிறீர்கள் என்று கேட்டான். கோபால் மாமா அந்த இனிப்புக் கடைக்காரர் எங்களை ஏமாற்றி விட்டார் என்று நடந்ததை எல்லாம் சிறுவர்கள் கூறினர்.

கவலை வேண்டாம் உங்களுக்கு கிடைக்க வேண்டிய இனிப்புக்கு அதிகமாகவே கொண்டு வருகிறேன். நீங்கள் யாரும் அந்தக் கடைக்குள் வரக் கூடாது. வெளியே நில்லுங்கள் என்று கோபால் கடைக்குள் நுழைந்தார்.

அப்போது கடைக்காரனின் மகன் தான் கடையைக் கவனித்துக் கொண்டிருந்தான். உள்ளே இருந்த அறைக்குள் கடைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான். இவனை எளிதாக ஏமாற்றலாம் என்று நினைத்த கோபால் இனிப்புப் பாத்திரத்திற்குள் கையைவிட்டு இனிப்புகளை எடுத்துச் சாப்பிட்டான். இதைப் பார்த்த சிறுவன் என்ன இனிப்பை எடுத்து சாப்பிடுகிறாய்? பணம் தராமல் எதையும் தொடக்கூடாது என்று கத்தினான்.

தம்பி உன் தந்தைக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் இப்படி இனிப்பை சாப்பிடுவதை அவர்பொருட்படுத்த மாட்டார். என் பெயர் எறும்பு. நீ வேண்டு மானால் அவரிடம் இனிப்பை நான் சாப்பிடுவதாகச் சொல். அவர் ஒன்றும் சொல்லமாட்டார் என்றான் கோபால். அப்பா கடைக்குள் எறும்பு வந்துள்ளது. நான் சொல்லியும் கேளாமல் இனிப்பை எடுத்து சாப்பிடுகிறது என்று கத்தினான் சிறுவன். தூக்கம் கலைந்ததால் எரிச்சல் அடைந்த கடைக்காரன் மகனேஎறும்பு வந்தால் விரட்டு... இல்லையேல் அதையே அப்படியே விட்டு விடு. எறும்பை சமாளிக்க உன்னால் முடியாதா? என்று கத்தினான். இதைக் கேட்ட கோபால் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.



இனிப்பு நிறைந்திருந்த பாத்திரத்தை தூக்கினான். சிறுவர்களுக்கு வழங்க இது போதும் என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டான்.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அவன் அப்பா நிறைய இனிப்புகளை எறும்பு எடுத்துச்செல்கிறது. பணம் ஏதும் தரவில்லை என்று கத்தினான். இதைக் கேட்ட கடைக்காரன் கோபம் கொண்டான். என் தூக்கத்தை கெடுக்காதே என்று எத்தனை முறை சொல்வது? நான் எழுந்து வந்தால் உன் தோலை உரித்து விடுவேன். எறும்பு இனிப்பை எடுத்துச் செல்வதற்காக யாராவது கவலைப்படுவார்களா? போனால் போகட்டும் எவ்வளவு இனிப்பை எடுத்துச் சென்றுவிடப் போகிறது. பேசாமல் இரு என்று கத்தினான். இனிப்புப் பாத்திரத்துடன் வெளியே வந்த கோபால் அங்கிருந்த சிறுவர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாக இனிப்புகளைத்தந்தான். அவர்களும் மகிழ்ச்சியாக சாப்பிட்டனர். உங்களை ஏமாற்ற முயன்ற கடைக்காரனை நன்றாக ஏமாற்றிவிட்டேன் என்ற கோபால் அங்கிருந்து புறப்பட்டான். தூக்கம் கலைந்து எழுந்த கிழவன் விடயம் அறிந்ததும் குய்யோ, முய்யோ என கத்தினான். அந்த எறும்பு யார் என்று தெரியாமல் நொந்து போனான்.

---

பஞ்சதந்திரக் கதைகள்

## முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாதமழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளி



ரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றிற்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகு நட்களாக பேச்சுத்துணைக்கு ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கும் மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவுவகைகளைப் புதிய தவளைக்குத் தந்தது.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு எனக்கவலைப் பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே



சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்? எனக் கேட்டது. "நான் ஏரியில் தங்கியிருந்தேன்" என்றது ஏரித்தவளை.

"ஏரியா? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்றுத்தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர்நிலை, அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித்தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?" என்றுகேட்டது கிணற்றுத் தவளை.



"இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி" என்றது ஏரித்தவளை. கிணற்றுத் தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றை விட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்கமுடியாது" என்றது.ஏரித்தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத்தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்ற தவளைகளும் நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் ஏரித்தவளையைப் பார்த்து "நீ பொய்யன், புரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து என்று கூறி ஏரித் தவளையைத் தாக்க முயன்றன.

அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கியபோது, அதனுள் தாவிச்சென்று குதித்த ஏரித்தவளை, தோண்டித் தண்ணீருடன் மேலே சென்றது.

தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

***முட்டாள்களிடம் வாதாடுவதைவிட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.***

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க ஹக்கீம் அழைப்பு

(கொழும்பு)

உலக சமாதானம், நிலையான அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, குற்றச் செயல்களை தடுக்கும் விடயத்தில் ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பு அளப்பரிய பங்காற்றி வருவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் உறுப்பு நாடுகள் பங்குபற்ற வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் 52 ஆவது மாநாட்டில் நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

56 ஆண்டுகளுக்கு முன்னர் புதுடில்லி நகரில் பர்மா, இந்தியா, இந்தோனேசியா, ஈராக், சிரியா ஆகிய நாடுகளோடு இலங்கையும் சேர்ந்து ஆசிய சட்ட ஆலோசனைக் குழுவை நிறுவியமை நினைவுக்கு வருகின்றது.

அப்பொழுது ஆறு உறுப்பு நாடுகளோடு நிறுவப்பட்ட இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா ஆகிய உலகின் இருபெரும் கண்டங்களிலுள்ள 47 உறுப்பு நாடுகளுடன் சர்வதேச அரங்கில் சமாதானத்துக்கும் முன்னேற்றத்திற்குமான அளப்பரிய சாதனைகளை ஈட்டி வருகிறது.

இதன் 50 ஆவது அமர்வு 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கறுப்புப் பணம் கடத்தல், ஆயுத பரிகரணம், மனித மற்றும் போதைப் பொருள் கடத்தல் என்பன சர்வதேச பயங்கர வாதத்தோடு தொடர்புபட்டு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

அவற்றை முறியடிக்க துரிதமாக தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# சிங்களவர்களுக்கு இணையான உரிமை தமிழர்களுக்கும் உறுதிப்படுத்துவோம் என்கிறார் நாராயணசாமி

(சென்னை)

இலங்கைக்கு வழங்கப்படும் போர் கப்பல்களை தமிழர்களின் நலனுக்கு எதிராக பயன்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி விளக்கமளித்துள்ளார்.


தற்போது இலங்கைக்கு வழங்கப்படவுள்ள போர்க்கப்பல்கள் ஏற்கனவே அந் நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி வழங்கப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் பங்கேற்க கூடாது என்று தமிழக தலைவர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளதாகவும் இதுகுறித்து பிரதமர் பரிசீலனை செய்வார் என்றும் நாராயணசாமி கூறினார்.

இலங்கையை எதிரி நாடு என்று அறிவிக்க தமிழக கட்சிகள் கோரினால் அந் நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை எப்படி மீட்பது என்று நாராயணசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தொடர்பாக மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்த கருத்துக்கள் ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த இலங்கை என்ற கோட்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்ட நாராயண சாமி, சிங்களவர்களுக்கு இணையான உரிமை தமிழர்களுக்கும் கிடைக்கும் என்பதை இந்தியா உறுதிப்படுத்தும் என்றும் தெரிவித்தார். (அ-2)



யாழ். மாநகர சபையின் யாழ் ஓசைப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கில் நடைபெற்ற போது...(படங்கள்: எஸ்.ஆர்.கரன்)

# எதிர்வரும் 21 ஆம் திகதி வரை காணிகள் விடுவிக்கப்படா

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மக்களின் வீடுகளோ, காணிகளோ விடுவிக்கப்படமாட்டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் வேண்டுதலுக்கு இணங்கவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

தற்போது தேர்தல் காலமாகையால் இவ்வாறு மக்களின் வீடுகளை மீளளிப்பது, காணிகளை விடுவிப்பது போன்ற செயற்பாடுகள் பிரசாரத்துக்காக பயன்படுத்தப்படுவது போலாகி விடும்.

ஆகையால் இதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர் கோரியதன் அடிப்படையில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார். (அ-4)

# பொதுநலவாய மாநாட்டுக்கு எதிராக சைக்கிள் பேரணி

(சென்னை)

இனப்படுகொலை இலங்கையே இலட்சம் தமிழரின் பிணக்குவியல் மீது பொதுநலவாய மாநாடா என்ற முழக்கத்துடன கொன்று குவிக்கப்பட்ட ஈழ உறவுகளுக்கும் சீரழிக்கப்பட்ட நம் சகோதரிகளுக்கும் நீதிகேட்டு திருச்சியில் இருந்து சென்னை நோக்கி மாணவர்கள் சைக்கிள் பேரணி நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு குறித்து தமிழகம் கடந்த இந்தியாவில் பல்வேறு வகையில் குரல்கள் எழுப்பப்பட்டுவரும் நிலையில் மிகப் பெரும் அழுத்தத்தை கொடுக்கும் வகையிலான போராட்டம் ஒன்றை மாணவர்கள் கையிலெடுத்துள்ளார்கள்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜெனிவா மாநாட்டின் போது அமெரிக்கத் தீர்மானம் அயோக்கியத் தீர்மானம், தனித் தமிழ் ஈழத்திற்கான பொதுவாக்கெடுப்பை உடனே நடத்து, ஈழத்தில் நடைபெற்றது திட்டமிட்ட இனப்படுகொலை என்ற முழக் கத்துடன் சென்னை லயோலா மாணவர்கள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்ட நெருப்பு தமிழகம் எங்கும் பற்றியெரிந்தது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் மலேசியாவில் இருந்து வந்துள்ள மாணவர்களுமாக 50 தமிழ் மாணவர்கள் இந்த சைக்கிள் பேரணியில் கலந்து கொள்கின்றார்கள்.

இனப்படுகொலை நாட்டில் பொதுநலவாய மாநாட்டை எப்படி நடத்த முடியும் என சட்டையைப் பிடித்து உலுக்கத் தயாராகியுள்ள இந்த மாணவர் சைக்கிள் பேரணி எதிர்வரும் 13 ஆம் திகதி திருச்சியில் இருந்து ஆரம்பித்து எதிர்வரும் 23 ஆம் திகதி சென்னையை சென்றடைகின்றது. (அ-2)

# ஈழத்தமிழர்களை வாழவைக்க பிரதமர் மன்மோகன் இலங்கை வருவாராம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்களை வாழவைக்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை சென்று வர விரும்புகிறார். விரைவில் சென்று வருவார். தமிழர்களின் வாழ்நிலை நன்றாக இருக்கும் என்று மத்திய இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கச்சதீவில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து தொழில் மையம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது.

கச்சதீவை இந்தியா இலங்கையிடம் கேட்டுப் பெறும் பட்சத்தில் இந்தியாவின் அனுபவத்திலுள்ள இலங்கையின் ஆழ்கடல் பகுதியை இந்தியா இழக்க நேரிடும்.

இலங்கையில் தமிழர்கள் கஷ்டப்படவில்லை. அவர்கள் நன்றாகவே வாழ்கின்றார்கள். அவர்களை மேலும் வாழவைக்க பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை சென்று வர விரும்புகிறார். விரைவில் அங்கு சென்று வருவார். தமிழர்களின் வாழ்நிலை நன்றாகவே இருக்கும்.

வெளிநாட்டவர்கள் தமிழகத்தில் தொழில் ஆரம்பிக்க ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனால் மாநில அரசு அதற்கான நிலத்தை கையகப்படுத்தி கொடுக்க முன்வரவில்லை. தமிழக அரசு நிலம் கொடுக்குமாயின் 2023 ஆம் ஆண்டில் தொழில் புரட்சி ஒன்று ஏற்படும்.

அதேபோல அதிக நிலம் வைத்துள்ளவர்கள் குழுவாக இணைந்து தொழில் தொடங்க முன்வந்தால் மத்திய அரசு 75 சதவீதம் பங்கு தொகை கொடுக்க தயாராகவுள்ளது. மிகுதியாகவுள்ள 25 சதவீதத்தை மட்டும் குழுக்கள் முதலீடு செய்தால் போதுமானதாக இருக்கும் என்றார்.

தமிழக மீனவர்கள் மீது கடந்த 4 ஆண்டுகளாக இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூடு எதையும் நடத்தவில்லை என்றார்.

அப்போது குறுக்கிட்ட பத்திரிகையாளர்கள் கடந்த ஆண்டும் துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தது. தொடர் தாக்குதல்கள் நடக்கின்றனவே என்றனர். அதற்கு அவர் பதிலளிக்கையில்,

கடந்த 4 ஆண்டுகளில் அந்தமாதிரிச் சம்பவம் எதுவும் நடக்கவில்லை. அப்படி நடந்திருக்குமாயின் எப்.ஐ.ஆர். (பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டிருக்கும். பதியப்பட்ட தகவல் அறிக்கையை காண்பித்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மேலும் இலங்கை- சீனா உறவால் இந்தியா பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் இலங்கைக்கு மத்திய அரசால் ஆயுதம் வழங்கப்பட்டது. அதேபோன்று பாகிஸ்தான் கேட்டாலும் அதுபற்றி யோசிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


மீண்டும் Mega (சி/4689)

After O/L & A/L

தகவல் தொழினுட்பம், ஆங்கில கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை 14th Sep.

அனேக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க

You can Win upto 75% scholarship

இலவச பரீட்சை அனுமதி, மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களுக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
| --- | --- | --- | --- | --- |
| 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677 | கொடிகாமம் வீதி, 021 2262399 | கட்டுக்காணி வீதி, 021 2270267 | A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925 | 192, குருமன்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050 |

# தமிழ்மக்கள் எதிர்பார்ப்பும் நவநீதம்பிள்ளையும்



2009 மே 18 இற்குப் பின்னர் உணர்ச்சிப் பெருக்கான ஒரு அரசியல் சூழலே தமிழர் தரப்பில் காணப்படுகிறது. மேலும் இது ஒரு காத்திருக்கும் அரசியலாக முன்னெப்பொழுதையும்விட அதிகரித்த அளவில் அரங்கின் முன்னணிக்கு வந்துவிட்டது.

ஈழத்தமிழர்கள் வெளியாருக்காக காத்திருப்பது என்பது விடுதலைப் புலிகளின் தோல்வியோடு தோன்றியதொரு போக்கு அல்ல. அது ஈழத் தமிழர்களின் நவீன அரசியலில் ஒரு வேர்நிலைக் குணாம்சமாகவே காணப்படுகின்றது. பெரிய தமிழ் நாட்டைத் தமது பின்தளமாகவும் பேரம் பேசும் சக்தியாகவும் கருதுவதிலிருந்து இது தொடங்குகிறது. பின்னாளில் புலப்பெயர்ச்சியோடு தமிழ் புலம்பெயர்ந்தவர் அமைப்புகளானது மற்றொரு பின்தளமாகவும் பேரம் பேசும் சக்தியாகவும் எழுச்சி பெற்றதோடு வெளியாருக்காக காத்திருப்பது என்பது மேற்குக்காகவும் காத்திருப்பது என்ற வளர்ச்சியைப் பெற்றது.

குறிப்பாக, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சியோடு இது முழுக்க முழுக்க வெளியாரிடம் தமது நம்பிக்கைகளை முதலீடு செய்துவிட்டு அவர்களுடைய ஒவ்வொரு அசைவையும் ஒவ்வொரு சொல்லையும் எதிர்பார்ப்போடு உற்றுக் கவனித்துக் காத்திருக்கும் ஒரு போக்காக பெருவளர்ச்சி பெற்றுவிட்டது.

கடந்த நான்காண்டுகளாக கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கூட மேற்படி காத்திருப்பை வளர்த்தெடுக்கும் ஓர் அரசி யலைத்தான் செய்துவருகின்றன. இப் பொழுதும் மாகாண சபைத் தேர்தலில் தாம் ஏன் பங்குபற்றுகிறோம் என்பதற்கு கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் கூறும் முக்கிய காரணங்களில் அதுவும் ஒன்றுதான். அதாவது, இந்தியா எங்களைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றவிட்டு வருமாறு கூறியது என்பதே அது. இவ்விதமாக வெளியாருக்காகக் காத்திருக்கும் ஓர் அரசியல் சூழலில்தான் நவநீதம்பிள்ளை அம்மையாரின் வருகையும் நிகழ்ந்தது.

சிங்களவர்களைப் பொறுத்தவரை தமது போர் நாயகர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முற்படும் மேற்கின் பிரதிநிதி அவர். அதே சமயம் தமிழர்களைப் பொறுத்த வரை அவர், ஒரு குறைகேள் அதிகாரி. எனவே இருவேறு உணர்ச்சிக் கொதிப்பான உளவியல்களால் இரண்டாகப் பிளவுண்டிருந்த ஒரு சிறு தீவுக்கே அம்மையார் வந்துபோயிருந்தார்.

பிறப்பால் அவர், ஒரு தமிழர் என்பதால், அவர் மீதான தமிழர்களின் எதிர்பார்ப்புகள் பெருகிச் சென்றன. அவருடைய ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அசைவும் உற்றுக் கவனிக்கப்பட்டன. அவர் அரசாங்கத்திற்கு எதிராகச் சொன்ன வசனங்கள் தலைப்புச் செய்திகளாயின. அதேசமயம் அவர் விடுதலைப்புலிகளிற்கு எதிராகச் சொன்ன வசனங்கள் ஒரு பகுதித் தமிழர்களை விசனத்திற்குள்ளாக்கின. அவருடைய உத்தியோகபூர்வ அறிக்கையில் அவர், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக கூறிய கருத்துக்களை விடவும் அரசாங்கத்திற்கு எதிராகக் கூறிய கருத்துக்களே அதிகமானவை. எனினும் ஒரு பகுதித் தமிழர்களால் அவர் கூறிய சில வசனங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தனது தமிழ் அடையாளம் காரணமாக சிங்களக் கடுந்தேசியவாதிகள் தன்னை ஒரு பக்கச்சார்பான தூதுவராக கருதிவிடக்கூடாத என்பதற்காகவே அவர் அவ்விதம் கூறியதாகவவும் ஒரு வியாக்கியானம் உண்டு.

ஆனால், நவநீதம் பிள்ளையின் கருத்துக்கள் அவருடைய கருத்துக்கள் அல்ல. அவர் மேற்கு நாடுகளின் கொள்கைத் தீர்மானங்களை அதிகம் பிரதிபலிக்கும் ஒரு தூதுவர்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டபோது அதில் தலையிடாதிருந்த ஐ.நா.வின் பிரதிநிதிதான் அவர். நாலாங்கட்ட ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நா. தலையிடாதிருந்தமை என்பது முழுக்க முழுக்க ஒரு அரசியல் கொள்கைத் தீர்மானம்தான். அதில் பொதுசனங்களிற்குச் சேதம் உண்டாகும் என்பது ஐ.நா.வுக்கு நன்கு தெரியும். நீரை வடித்து மீனைப் பிடிப்பது என்பது இரத்தம் சிந்தும் ஒரு படை நடவடிக்கைதான் என்பதை நன்கு தெரிந்து வைத்துக்கொண்டு எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமே அது.

மேலும் அப்படை நடவடிக்கையின்போது என்ன நடந்தது என்பதை அவர்களுடைய சக்திமிக்க சற்றலைற் கமராக்கள் அவர்களிற்கு உடனுக்குடன் காட்டியிருந்தன. எனவே, ஐ.நா.வுக்கோ அல்லது மேற்கு நாடுகளிற்கோ இந்தியாவுக்கோ தெரியாமல் எதுவும் நடக்கவில்லை.

அப்பொழுது அவையனைத்தும் தவிர்க்கப்படவியலாத பக்கச் சேதங்களாகவே பார்க்கப்பட்டன. இலங்கை அரசாங்கமானது மேற்கு நாடுகள் மற்றும் இந்தியாவின் மேலாண்மையை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் ஒரு வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றத் தவறியபோதே கொலாற்றரல் டமேஜ் ஆனது போர்க் குற்றமாக மாறலாம் எனும் ஒரு நிலை தோன்றியது. இங்கு தமிழர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு. பக்கச் சேதங்கள் போர்க்குற்றங்களாக மாற்றப்படலாம் என்ற ஒரு தோற்றம் தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் இன்று வரையிலும் போர்க்குற்றம், இனப்படு கொலை போன்ற சொற்கள் ஐ.நா.,மேற்கு நாடுகள் மற்றும் இந்தியாவின் உத்தியோக பூர்வ ஆவணங்களில் முதன்மை ஸ்தானங்களில் காணப்படுவதில்லை. ஏன் நவநீதம்பிள்ளையின் சொல்லாடல்களிற்குள்ளும் இல்லைதான்.

அதாவது, அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு கருவியாகவே போர்க்குற்றம் பற்றிய விடயங்கள், பிரஸ்தாபிக்கப்படுகிறது. அதுகூட மேற்கத்தைய ஊடகப் பரப்பில்தான் அதிகம் பிரயோகிக்கப்படுகிறது. வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களிலும் இல்லை. அரசுகளின் உத்தியோக பூர்வ அறிக்கைகளிலும் இல்லை. எனவே, அரசாங்கம் மேற்கு நாடுகளையும் இந்தியாவையும் மகிழ்விக்கும் ஒரு வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுமாயிருந்தால் கடைசிக் கட்டத்தில் நடந்தவற்றை பக்கச் சேதமாகக் கருதி, பொருட்படுத்தாதுவிடும் ஆபத்தும் உண்டு.

மேலும், விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பின்னரும் அநேகமான மேற்கத்தைய நாடுகளிலும், இந்தியாவலும் அந்த அமைப்பின் மீதான தடை நீக்கப்படவில்லை என்பதை தமிழர்கள் உற்றுக் கவனிக்க வேண்டும்.

இதுதவிர மற்றொரு குரூரமான அனைத்துலக யதார்த்தமும் உண்டு. ஐ.நா.வின் உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ஐ.நா.வின் மிக மூத்த மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட உத்தியோகஸ்தர்களுக்கு ஐ.நா.வின் நடவடிக்கைகளிலோ அல்லது ஐ.நாவின் நடவடிக்கைகளைக் கண்காணிப் பதிலோ, மேற்பார்வை செய்வதிலோ அல்லது கவனியாது விடுவதிலோ நேரடியான வகிபாகம் எதுவும் இல்லை.

இத்தகையதொரு நடைமுறை யதார்த்தத்தின் பின்புலத்தில் வைத்தே நவநீதம்பிள்ளையின் வருகையை மதிப்பிட வேண்டும். தமிழர்களில் அநேகர் அவர் ஓர் தமிழர் என்பதால் அவரைத் தமக்கு மிக நெருக்கமானவராக உணர்கிறார்கள். அவர் வேரில் தமிழர்தான். அதேசமயம் படிப்பால் ஒரு மேற்கத்தேயர்.

நிறவெறி அரசுக்கு எதிராக ஒரு செயற்பாட்டாளராக அவர் வீரமாகப் போராடிய போது அவருடைய மேற்கத்தைய படிப்பும், அதனால் பெற்ற ஆளுமை உருவாக்கமும் அங்கீகாரமும்தான் அவருக்குக் கேடயங்களாகத் திகழ்ந்தன. எனவே, அவரை ஒரு மேற்கு மயப்பட்ட தென்னாபிரிக்கத் தமிழப்பெண் என்பதே சரி, இப்படி பார்த்தால் அவர் ஒரு அபூர்வமான கலவை. ஆசியாவும், ஆபிரிக்காவும் மேற்கு நாடுகளும் சேர்ந்துருவாக்கிய மூன்று கண்டங்களின் நூதனமான கலவை.

இலங்கையில் அவர் அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது அதிப்பில் பங்குபற்றிய ஒரு தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி கூறினார்... அவருடைய தோற்றம், நடையுடை, பாவனை எல்லாவற்றிலும் ஒரு செயற்பாட்டாளுமைக்குரிய வீச்சையும், ஓர்மத்தையும் காணமுடிந்ததாகவும் அவருக்குள் ஒரு நெருப்பு எரிவதை உணர முடிந்ததாகவும்....

நவநீதம்பிள்ளையின் இந்த அம்சம் தான் தமிழர்களிற்கு அதிகம் சாதகமானது. அவர் தன்னை ஒரு தமிழராகப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்று தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது. அவர் ஒரு அனைத்துலக மன்றத்தின் பிரதிநிதி அனைத்துலக இராஜ்ஜ சூதாட்டத்தின் ஒரு கருவியாகவே இங்கு வந்து போனவர். ஆனால், அவருக்குள் கனன்றெரியும் நெருப்புக் காரணமாக அவர், அனைத்துலகின் அபிப்பிராயங்களை உருவாக்க முடியும். அது அதிகமதிகம் நீதியின் பாற்பட்ட ஓர் அபிப்பிராய உருவாக்கமாகவே இருக்கும். மாறாக ஓர் இனத்துக்குச் சாய்வான அபிப்பிராயமாக அல்ல. தமிழர்கள் தமது தரப்பில் நீதி உண்டு என்று நம்புமிடத்து நவநீதம்பிள்ளையை கொந்தளிப்பான ஓர் உளவியலுக்கூடாக அணுகும் அவசியமில்லை.

பூகோளமயப்பட்ட இவ்வுலகில் எல்லாமே அரசியலாகிவிட்டன. மனித உரிமைகளும் அரசியல்தான். போர்க்குற்றங்களும் அரசியல்தான். சூழலியலும் அரசியல்தான். இக்குரூரமான அரசியலை தமிழர்கள் உள்வாங்க வேண்டும். அரசுக்கும்-அரசுக்கும் இடையிலான நலன் சார்ந்த சூதாட்டத்தில் முதலில் பலியிடப்படுபவை மனித உரிமைகள்தான். எனவே, தூய நீதிக்கும், குரூரமான இராஜிய நடைமுறைக்கும் இடையில் தமக்கு அதிகபட்சம் சாதகமான ஒரு சமநிலைப் புள்ளியைக் கண்டுபிடிக்க வேண்டியது தமிழர்கள் தான்.

வெளியாருக்காகத் காத்திருப்பது அல்லது வெளியாரிடம் முறையிடுவது அல்லது வெளியாரிடம் அளவுக்கு மிஞ்சி எதிர்பார்ப்பது என்பதெல்லாம் ஒரு எல்லைக்கும் அப்பால் சொந்தப் பலத்தில் நம்பிக்கையிழந்த அரசியல் தான். வீழ்ச்சிக்குப் பின்னரான ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலைக் கையாளவல்ல தீர்க்க தரிசனமும், ஜனவசியமும் மிக்க பேராளுமைகள் இல்லாத வெற்றிடத்திலிருந்தே இது ஒரு பெரும் போக்காக மேலெழுகிறது. ஒரு கட்டத்தில் இது வெளியாரைக் கையாள்வதற்குப் பதிலாக வெளியாரால் கையாளப்படும் ஒரு விபரீத வளர்ச்சியைப் பெறுகிறது. எனவே, பேராளுமைகளை உருவாக்குவது பற்றி தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

-நிலாந்தன்-

# ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் தலையாட்டி சித்தரின் காலஞானம்



ஆன்மீகம் 114

சித்தர் பெருமான் கூறிய அருள்வாக்கு:

...கேளப்பா ஈசனொரு காலந் தன்னிற்
கிருபையுடன் சபைகூடியிருக்கும் போது
வாளப்பா மாலயர்தம் முகத்தை நோக்கி
வந்தவா றெவ்வகையோ சென் றதே
கேளப்பா சேயகால யந்தா னெங்கே
குருநமசிவாயமெய்கே நீங்க ளெங்கே
குருநமசி வாயமெங்கே நீங்க ளெங்கே
தமக்கு வந்து சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் கனத்தின்முன் னுரைத்தப் போனேன்
வாதாட்ட மெனதாச்சே இனி யென் சொல்வேன்
சேற்றில் நாட்டியதோர் கம்பம் போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள் தோறும்
ஆற்றுகிற னந்தமது ஆகும் போது
அரகரா அந்நேரம் நடக்கை கேளே!
கேளப்பா நடந்த கதை சிவமே யுண்மை
செடியாகச் சக்கரங்கள் திரும்பும் போது
பாழப்பா தசநாதம் மௌனம் பாயும்
பரமான மௌனமது பரத்திற் சாடும்
ஏறப்பா அடுக்களும் இடிந்து வீழும்
இருந்தசதா சிவமோடி மணியில் மீளும்
கேளப்பா இதுகேளா யெவருஞ் சொல்வார்
கோ கோ கோ அண்டமெல்லாங் கவிழ்ந்து போமே
கழிந்துபோ மப்போது அடியெ னங்கே
கருத்து வைத்தத் தியானமொருதி யானமுண்டு.
தவிழ்ந்து போங் காலம்போ நிறுத்துவேன்யான்



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னை சித்தர், தியாகிகளுடன் அன்னக்கொடி ஏற்றுதல்

இதை உலகத்திற்கு ஒவ்வொரு 2010 க்குள் நாட்டில் என்ன நடக்கும் என்பதை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீகாக புஜண்டர் காவியம் 33 இல் கூறியுள்ளார். இதனை அறிந்து மக் கள் அலட்சியப்படுத் தாமல் பயபக்தியுடன் மிகுந்த எச்சரிக்கையுடனும் தரும சக்தியின் துணையை நாடி சாதுக் களின் ஆதரவை பெற்று வாழ்வதே நலம் கோடி பயக்கும்.

சுவாமி 2010 இல் உலகம் முழுவதும் அழிந்து விடும் என்று பலர் பலவித மான கருத்துக்களை அவ்வப்போது கூறி வருகிறார்கள். இதைப் பற்றி நீங்கள் விளக்க வேண்டும், என்றேன்.

ராஜா! 2010 க்குள்ளாகவே 1984 ஆம் ஆண்டே பூமிலாக்கை கழற்றி விட்டார்கள், அதனால் பூமி தன் நிலையை விட்டு நகர்ந்து வருவதால் எப் போது எது நடக்கும் என்று கூற முடியாது. இது என்னைத் தவிர வேறு யாராலும் கூறவே முடியாது காயா வெய்ய காஞ்சி கனத்த வெள்ளம் வந்து பேயா மழை பொழியும் என்று கூறியுள்ளார்கள்.

2010 க்குள்ளாகவே உலகெங்கும் மாபெரும் மாற்றங்கள் (அதாவது இயற்கை சீற்றங்கள், பேரழிவுகள், இன, மத பூசல்கள், போர்கள் முழும் ஆபாயம்) ஏற்படும்.

மனிதரில் ஐந்து வகையான மனிதர்கள் உண்டு. மரமுண்டு, பறவையுண்டு, மிருகமுண்டு, மனிதரில் மனிதருண்டு, தேவரும் மனிதராய் பிறப்பதுண்டு. இயற்கையின் சீற்றத்தில் நான்கில் மூன்று மடங்கு ஜனங்கள் குறைந்து விடும். காட்டிலிருந்து வந்த பறவைக் கூட்டமும், மிருக கூட்டமும், காட்டுக்கே போய்விடும். கடலில் இருந்து வந்த உலகம் முழுவதும் மனித ஜீவராசிகளை மீண்டும் அவர் அவர் இருந்த ரூபங்களாய் கடல் சொந்தமாக்கி கொள்ளும். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# சிரியா மீதான அமெரிக்காவின் எச்சரிக்கை, இலங்கைக்குமா?

ஜெனீவா தீர்மானத்துக்கு அமைய இலங்கை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை என்று அமெரிக்கா பலமுறை சுட்டிக்காட்டியும் அதையெல்லாம் இலங்கை அலட்டிக்கொள்ளவே யில்லை.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரும் தார்மீக உரிமை அமெரிக்காவுக்குக் கிடையாது என்று கடந்தவாரம் கூட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

அதாவது யார் எதைச் சொல்கிறார்கள் அதற்கு அவர்களுக்கு என்ன தகுதி உள்ளது என்று குறை பிடிப்பதிலேயே அரசாங்கம் குறியாக இருக்கிறதேயன்றி தனக்கான கடப்பாட்டை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்தவில்லை.

ஜெனீவா தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றியுள்ளதா? என்பதை மதிப்பிட வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கொழும்பில் வெளியிட்ட கருத்துக்கள், அவரது அறிக்கை எந்தளவுக்கு இலங்கைக்கு சாதகமாக இருக்கும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. நவநீதம்பிள்ளையின் அறிக்கை தமக்குச் சார்பாக அமையப் போவதில்லை என்பதை அரசாங்கம் நன்றாகவே உணர்ந்திருப்பதால்தான் காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை நன்றாகவே புரிந்து கொள்ள முடிவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நவநீதம்பிள்ளை ஜெனீவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை திருப்திகரமாக இல்லாது போனால் அமெரிக்கா அடுத்து என்ன செய்யும் என்ற கேள்வி இருக்கிறது.

இன்னொரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வராது என்றும் ஏனைய அமைப்புக்களுடன் ஆலோசித்து வேறு வழிகளை ஆராயும் என்றும் சில மாதங்களுக்கு முன்னரே அமெரிக்கா தெரிவித்திருந்தது.

அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உதவியை நாட முடியாது, அங்கு வீட்டோ அதிகாரத்துடன் ரஷ்யாவும் சீனாவும் தமக்கு ஆதரவாக இருக்கின்றன என்று இலங்கை வெளிப் படையாகவே பலமுறை கூறியுள்ளது.

அமெரிக்காவுக்கு இது ஒரு சிக்கலான விடயம்தான்.

ஏற்கனவே சிரியா விடயத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் நடவடிக்கை எடுக்க முயன்ற அமெரிக்காவுக்கு இரண்டுமுறை தோல்விதான் மிஞ்சியது.

இலங்கைக்கு எதிராக பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டு வந்தாலும் அதுவே நடக்கும் என்பதும் அமெரிக்காவுக்குத் தெரியும்.

ஆனால், சிரியா விடய'த்தில் அமெரிக்கா தனது பொறுமையின் எல்லைக்கே வந்துவிட்டது.

பாதுகாப்புச் சபை மூலம் சிரியா தப்பிக்கொள்வதை அனுமதிக்க முடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார். தனியே சிரியாவுக்கான எச்சரிக்கையாக மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது.

சிரிய விவகாரம் புதிய புண் என்றால் இலங்கை விவகாரம் பழைய புண். இந்த இரண்டுக்கும் வேறு வேறு பரிமாணங்கள் இருந்தாலும் சிரியா மீதான தாக்குதலை பாதுகாப்புச் சபையின் ஒப்புதலின்றி அமெரிக்கா நடத்துமேயானால் இலங்கை அரசாங்கமும் தனது போக்கை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும்.

ஏனென்றால் அமெரிக்கா நினைத்தால் சீனாவையும் ரஷ்யாவையும் உதாசீனம் செய்து விட்டு இலங்கைமீது நடவடிக்கை எடுக்கலாம்.

நடவடிக்கை என்றதும் இராணுவ நடவடிக்கையாக இருக்கும் என்று கருதக் கூடாது. அதற்கான தேவை தற்போது இங்கில்லை.

ஆனால், இலங்கை மீது வேறு நடவடிக்கைகளை அமெரிக்கா தன் னிச்சையாக எடுப்பதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தும்.



சிரியா மீதான தாக்குதலை அமெரிக்கா தன்னிச்சையான ஆரம்பிக்குமேயானால் ரஷ்யாவும் சீனாவும் கூட தமது பொறுப்புகளை ஓரளவுக்கு உணர்ந்து கொள்ளும்.

அதாவது நிரந்தர உறுப்புரிமையை வைத்து சிரியா மீதான தாக்குதலை தடுக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் இந்த நாடுகள் தமது மூலோபாயங்களை மாற்றிக் கொள்ள முனையலாம். அத்தகைய மாற்றம்கூட இலங்கைக்கு சாதகமானதாக இருக்காது. ஆக, ஒரு பக்கத்தில் ஒபாமாவின் அறிக்கை உலகின் சட்டாம்பிள்ளையாக அமெரிக்காவை மீண்டும் உறுதிப்படுத்தினாலும் இன்னொரு பக்கத்தில் மனித உரிமை மீறல்களுக்கு பாதுகாப்பு கவசமாக ஐ.நா. பாதுகாப்புச் சபை இருப்பதையும் முடிவுக்குக்கொண்டு வருவதற்கான தொடக்கமாகவும் கருதலாம்.

-ஹரிகரன்- (முற்றும்)

# வடக்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் 16 ஆம் திகதி பணியை ஆரம்பிக்கின்றனர்

(கொழும்பு)

**இலங்கை வரும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வட மாகாணத்தில் தமது தேர்தல் பணிகளை ஆரம்பிக்க வுள்ளதாக தேர்தல்கள் திணைக்களமும் பவ்ரல் அமைப்பும் தெரிவித்துள்ளன.**

இலங்கையை நாளைய தினம் வந்தடையவுள்ள 30 சர்வதேச கண் காணிப்பாளர்களையும் வட மாகாண தேர்தல் கண் காணிப்பு பணிகளில் ஈடுபடுத்துமாறு தேர்தல்கள் ஆணை யாளர் மஹிந்த தேசப் பிரிய உத்தர விட்டுள்ளார்.

இதன்படி, அனைத்து வெளி நாட்டு கண்காணிப்பாளர்களும் வட மாகாணத்தின் கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் தமது கண்காணிப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

தேர்தல்கள் திணைக்களத்தின் அழைப்பின் பேரிலேயே இந்தியா வின் முன்னாள் தேர்தல் ஆணை யாளர் கோபாலசுவாமி தலைமை யில் 20 பேர் நாளை இலங்கை வர வுள்ளனர்.

இவர்களுள் இந்தியா, பாகிஸ் தான் ஆகிய நாடுகளிலிருந்து தலா ஐவர், பங்களாதேஷிலிருந்து மூவர், மாலைதீவிலிருந்து இருவர், நேபா ளத்திலிருந்து இருவர், பூட்டான், ஆப் கானிஸ்தான் ஆகிய நாடுகளிலி ருந்து தலா ஒவ்வொருவரும் உள் ளடக்கப்படுவர்.

தேர்தல்கள் ஆணையாளர் நாய கம் இப் பிரதிநிதிகள் குழுவினரை நாளை மறுதினம் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, 15 ஆம் திகதி சர்வதேச கண்காணிப்பு குழுவினர், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பவ்ரல் அமைப் பின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் தேர்தல் கள் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதென பிரதி ஆணையாளர் எம். மொஹமட் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, பவ்ரல் அமைப் பின் அழைப்பின் பேரில் சுதந்திர மான தேர்தலுக்குரிய ஆசிய வலை யமைப்பிலிருந்து தமாது மக்புள் என்பவரது தலைமையில் 9 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு இலங்கை வருகிறது.

தாய்லாந்து, தாய்வான், பங்க ளாதேஷ், பிலிப்பைன்ஸ், நேபா ளம், இந்தோனேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இப் பிரதிநிதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியன்று தேர்தல்கள் ஆணையா ளரை சந்தித்த பின்னர் தமது பணி களை வடக்கில் ஆரம்பிக்கவிருப் பதாக பவ்ரல் பணிப்பாளர் நாயகம் ரோஹண ஹெட்டியாரச்சி கூறினார்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர் களுக்கென இலங்கை தேர்தல் விதி முறைகள், ஊடக அமைப்பு, கள நிலவரம் என்பன தொடர்பில் பவ்ரல் அமைப்பு விளக்கமளிக்க விருப்ப தாகவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் நீண்ட காலத் திற்கு பின்னர் நடத்தப்படும் மாகாண சபைத் தேர்தல் சர்வதேசத்தின் கவனத்தை திசை திருப்பியிருப்பதால் அனைத்து சர்வதேச கண் காணிப் பாளர்களையும் வட மாகாணத் திலேயே கண்காணிப்பு பணிக ளில் ஈடுபடுத்த வேண்டுமெனவும் பிரதி ஆணையாளர் எம்.மொஹ மட் குறிப்பிட்டார். (அ-2)

# 15 ஆயிரம் ரூபா பணத்திற்காக மனைவியை அடகு வைத்த நபர்

போதைப் பொருள் கொள்வனவுக்காக நபர் ஒருவர் தனது மனை வியை நண்பர் ஒருவரிடம் ஈடாக வைத்த சம்பவம் தம்புள்ள பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த விசித்திரமான சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

போதைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அந்த நபர் 15 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு தனது மனைவியை தன் நண்பர் ஒருவரிடம் அடகுப் பொருளாக வைத்துள்ளார்.

ஒன்றரை மாத கால ஒப்பந்த அடிப்படையிலேயே அந்நபர் தனது மனைவியை இவ்வாறு அடகு வைத்துள்ளார். ஒன்றரை மாதம் கடந்த நிலையில் மனைவியை மீட்பதற்காக பணத்துடன் நண்பரின் வீட்டுக்கு சென்ற போது, நண்பரோ அடகுப் பொருளான பெண்ணை நண்பனின் மனைவி மீள வழங்க மறுத்துள்ளார்.

மனைவியும் தன் கணவருடன் செல்ல விரும்பமில்லை எனத் தெரி வித்துள்ளார்.

தன் கணவர் போதையில் சித்திரவதை செய்வதாகவும் கணவரின் நண்பர் மிகவும் கருணையுடன் பார்த்துக் கொள்வதாகவும் மனைவி பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, ஒன்றரை மாதம் குடும்பம் நடத்திய நண்பருடன் தொடர்ந்தும் தான் வாழ விரும்புவதாக மனைவி குறிப்பிட்டுள்ளார். மனைவியை எவ்வாறேனும் தன்னிடம் மீட்டுத் தருமாறு கணவர் பொலிஸாரிடம் கோரியுள்ளார். (அ-2)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான கைலாச வாகன வெள்ளோட்டத்தில் சிற்பக் கலைஞர் செ.பாலச்சந்திரனை கௌரவித்து **சிற்ப சிரஞ்சீவி** என்னும் சிறப்புவிருது தேவஸ்தானத்தால் வழங்கி வைக்கப்பட்ட போது...

# 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காங்கேசன்துறைக்கு ரயில் வரும்

## அமைச்சர் பசில் உறுதியளிப்பு

(சுன்னாகம்)

அடுத்த வருடம் மார்ச் மாதத்திலி ருந்து யாழ்ப்பாணத்திற்கான புகை யிரத சேவை காங்சேகன்துறை வரை நடைபெறுமென பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுன்னாகத்தில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களால் தெரிவு செய்யப்ப டும் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வுள்ள இந்த மாகாண சபையூடாக நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளையும் அதனூடான மேம் பாட்டையும் கருத்தில் கொண்டு பலம், சேவை, திறமை என்ற ரீதியிலான பிரதிநிதிகளை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்.

அதனூடாக உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு நல்ல கல்வியைப் புகுட்ட முடியுமென்பதுடன், விவசாயம், கடற்றொழில், கைத்தொழிற்றுறை உள்ளிட்ட தொழிற்றுறைகளை மேம்படுத்துவதுமட்டுமல்லாது அத னூடாக துறைசார்ந்தவர்களது வாழ் வாதாரத்தையும் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் அவற்றுக்கான சந்தை வாய்ப்பின் ஊடாக மேம் படுத்தமுடியும்.

இப்பகுதியின் பல்வேறு அபிவி ருத்திப் பணிகளை மத்திய அரசின் நிதியுதவியுடனேயே நாம் முன்னெ டுத்து வருகின்றோம். குறிப்பாக தென்பகுதியிலிருந்து வரும் லக்ஷ பான மின்சார விநியோக திட்டங்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் எதிர் வரும் 14 ஆம் திகதி சுன்னாகத்தி லுள்ள மின்பரிமாற்று நிலை யத்தை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே முக்கியத்துவம் வாய்ந்த வடக்குக்கான மற்றுமொரு அபிவிருத்தியாக யாழ்ப்பாணத்திற் கான புகையிரத சேவை அடுத்தாண்டு மார்ச் மா்தம் முதல் காங்கேசன் துறை வரை இடம்பெறவுள்ளது.

இவ்வாறான அபிவிருத்தி செயற் றிட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்ற போதிலும் அவற்றை குறைசொல்லுவதிலும் பிழை கண்டு பிடிப்பதிலுமே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஏ-9 வீதி புனரமைக் கப்பட்ட போதும் சுன்னாகத்தில் மின் பரிமாற்று நிலையத்தை அமைக் கும் போதும் இவ்வாறுதான் அவர் கள் குறைகூறி வந்தனர். ஆயினும் நாம் பலகோடி ரூபாய்களை செல விட்டு எமது மாணவர்கள் மின் விளக் கில் கல்வி கற்க வேண்டுமென்ப தற்காக மின் விநியோக திட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

இதனிடையே குறிப்பாக ஏ-9 வீதியில் வவுனியா ஓமந்தையி லுள்ள சோதனைச் சாவடி எதிர்காலத் தில் இருக்க மாட்டாது. அவ்வாறு எதிர்காலத்தில் சோதனை சாவடி அமைவதற்கு நாம் இடமளிக்கவும் போவதில்லை.

இந்நிலையில் மக்கள் அமைதி, சுதந்திரம், அபிவிருத்தி, மகிழ்ச்சியு டன் வாழக்கூடிய வகையில் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் நினைவில் நிறுத்தி எதிர்காலம் தொடர்பாக சிந்தித்து அபிவிருத் தியையும் மேம்பாட்டையும் கருத் தில் கொண்டு எமக்கு வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண் டார். (அ-2)

# பிரி.பொலிஸ் இணையத்தில் புலிக்கொடி உள்ளடக்கம்

(கொழும்பு)

பிரித்தானிய பொலிஸ் இணை யத் தளத்தில் புலிக்கொடி சின்னம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

தமிழ்மொழிக்கான தேசிய கொடி யாக புலிக்கொடியை பிரித்தானிய பொலிஸ் இணையத்தளம் உள்ளடக் கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் பிரித்தானிய பொலிஸாரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தமிழ்மொழிக் கான தேசிய கொடியாக புலிக் கொடி உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிக்கு கொடி இல்லாத காரணத்தினால் புலிக் கொடி உள்ள டக்கப்பட்டுள்ளதாக கொள்ளினும் இது தொடர்பில் லண்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கா துள்ளதாக குறித்த பத்திரிகை குற் றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# டி.எஸ்.சேனநாயக்கவின் சிலையை அகற்ற முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர சதுக் கத்தில் இருந்து முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் சிலையை அகற்றுவதற்காக, அரசாங்கம் ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யின் பெயரை பயன்படுத்துவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கம் கோரி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நவநீதம்பிள் ளைக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதற்கு பதில் வந்ததும் பல விட யங்களை வெளியிட முடியும் என்று கருணாதிலக்க குறிப்பிட்டார்.

சுதந்திர சதுக்கத்தில் உள்ள டிஎஸ். சேனநாயக்கவின் சிலையையும் பௌத்த கொடியையும் அகற்ற நவநீதம்பிள்ளை கோரினாரா? என்று ரணில் விக்ரமசிங்க விளக் கம் கோரியுள்ளார். (அ-2)

# இலங்கையின் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவுவோம்

## சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் உறுதியளிப்பு

**இலங்கையில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த உதவிகள் வழங்கப்படும் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வரவேற்கத்தக்க வகையில் அமைந்துள்ளதாகவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் லியூ யுன்சான் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் டி.எம்.ஜயரட்னவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு போன்றவற்றில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி வரவேற்கப்படவேண்டியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் உயர்மட்டத்தில் அரசியல் நல்லுறவு காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீன கம்யூனிஸ்ட் கட்சி நிலையியற் குழுவின் அரசியல் பணியக உறுப்பினர் லியூ யுன்சான் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வருட ஆரம்பத்தில் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இணக்கம் காணப்பட்ட மூலோபாய கூட்டுறவுக்கான அர்ப்பணிப்பை இந்தச் சந்திப்பின் போது இரண்டு நாடுகளும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

சீனாவின் நீண்டகால உதவிகளுக்காக இதன்போது நன்றி தெரிவித்துள்ள ஜனாதிபதி தமது சீன விஜயத்தின்போது இணக்கம் காணப்பட்ட உடன்படிக்கைகளை இரண்டு நாடுகளும் விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதும் அதனூடாக இரு நாடுகளிடையேயான கூட்டுறவை விரிவுபடுத்துவதும் தமது விஜயத்தின் நோக்கமாகும் என இதன்போது லியூ யுன் சான் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தல், இருநாட்டு பொருளாதார கூட்டுறவை மேம்படுத்தல் என்பவற்றுடன் பொருளாதார அபிவிருத்தி , கலாசாரம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற ஏனைய துறைகளிலும் கூட்டுறவுக்கான சிறந்த இயங்கு விசையை எற்படுத்த முடியும் என்றும் சீனப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## தற்காலிக அ.அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலுக்காக தற்காலிக அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான காலக்கெடு எதிர்வரும் 15 ஆம் திகதிவரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடையவிருந்ததாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## நவியிடம் விளக்கம் கோரி எதிர்க்கட்சி தலைவர் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் தேசபிதா டி.எஸ். சேனநாயக்காவின் சிலையையும் பௌத்தக் கொடியையும் சுதந்திர சதுக்கத்திலிருந்து அகற்றிவிடுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது தொடர்பாக துரிதமாக விளக்கம் அளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ரணில் விக்ரமசிங்க கடந்த திங்கட்கிழமை நவிபிள்ளைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த 8 ஆம் திகதி வெளியான சிங்களப் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் இலங்கைக்கான தங்களின் விஜயத்தின் போது தாங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்த தருணத்தில் சுதந்திர சதுக்கத்திலிருந்து மறைந்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் உருவச்சிலையை அகற்றுமாறு தாங்கள் கோரிக்கை விடுத்திருந்ததாக கூறப்பட்டிருந்தது.

டி.எஸ். சேனநாயக்கா நாட்டின் ஸ்தாபகர் மட்டுமன்றி எனது கட்சியின் ஸ்தாபகத் தலைவருமாவார் என்பதை தாங்கள் அறிவீர்கள். சுதந்திர சதுக்கத்திலிருந்து பௌத்தக் கொடியையும் அகற்றுமாறு தாங்கள் கோரியிருந்ததாக இப்பத்திரிகை பேட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விரிவான விளக்கத்தை அளிப்பது மெச்சத்தக்கது. தங்கள் கவனத்துக்கு பத்திரிகைப் பேட்டியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என இக்கடித்தத்தில் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருக்கிறார். (அ-2)

## சைவ சமய எழுச்சிவிழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் எழாலை அருள் மிகு கண்ணகை அம்பாள் அறநெறிப்பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் சைவசமய எழுச்சி விழாவும் குங்குலியக்கலய நாயனார் குருபூசையும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதர்சன் தர்ப்பணா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி விகடகவி மு. திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரி காந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வுக்கான ஆசியுரையை சிவ நெறிச் செல்வர் சிவ.சண்முகவடிவேல் வழங்க வாழ்த்துரையை ஏழாலை கண்ணகை அம்பாள் தேவஸ்தான தலைவர் தம்பையா திருஞானசம்பந்தர் வழங்கவுள்ளார். தொடர்ந்து சைவப்புலவர் கா.கமலநாதன் வழங்கும் **குங்குலியக்கலய நாயனார் காட்டும் வாழ்வியல்** எனும் விடயப் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (அ-5)




- கி.மு 490 - கிரேக்கம் மரதன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பாரசீகத்தைத் தோற்கடித்தது. பிடிப்பிடஸ் என்ற கிரேக்க வீரன் இவ்வெற்றிச் செய்தியைத் தெரிவிக்க நெடுந்தூரம் ஓடினான். மரதன் ஓட்டப்போட்டிக்கு இதனாலேயே இப்பெயர் இடப்பட்டது.
- 1609 -ஹென்றி ஹட்சன் *ஹட்சன* ஆற்றைக் கண்டுபிடித்தார்.
- 1848 -சுவிட்சர்லாந்து கூட்டமைப்பு ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.
- 1857 - வட கரோலினாவில் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 426 பேர் கொல்லப்பட்டனர். இக்கப்பலில் 13-15 தொன் தங்கம் கொண்டு செல்லப்பட்டது.
- 1933 - அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன் முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி வீட்டுக்காவலிலிருந்து ஜேர்மனிய படைத்தளபதி "ஒட்டோ ஸ்கோர்செனி என்பவனால் விடுவிக்கப்பட்டார்.
- 1948 - முகமது அலி ஜின்னா மறைந்த அடுத்த நாள் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் ஐதராபாத் மாநிலத்தினுள் நுழைந்தது. ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.
- 1953 - நிக்கிட்டா குருசேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1959 - லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1977 - தென்னாபிரிக்காவின் நிறக்கொள்கைக்கெதிராக போராடிய ஸ்டீவ் பைக்கோ பொலிஸாரின் காவலில் இருந்த போது உயிரிழந்தார்.
- 1992 - நாசாவின் எண்டெவர் விண்ணோடம் கறுப்பு-அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2005 - இஸ்ரேல் காசாப் பகுதியில் இருந்து தனது படைகளை முற்றாக விலக்கியது.
- 2006- திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் ஜேர்மனியில் நிகழ்த்திய உரையின் போது "தீங்கு விளைவிக்கிற மற்றும் மனிதத் தன்மையற்ற விடயங்களையே நபிகள் நாயகம் இவ்வுலகிற்கு அளித்தார்" என்று தெரிவித்தார். இதற்கு இஸ்லாம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து திருத்தந்தை மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பிறப்புகள்

- 1832 - **சி. வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி, (இ. 1901)**
- 1913 - ஜெசி ஓவென்ஸ், அமெரிக்க தடகள ஆட்டக்காரர் (இ. 1980)
- 1943 - மைக்கல் ஒண்டாச்சி, இலங்கையில் பிறந்த எழுத்தாளர்

இறப்பு

- 2009 -நார்மன் போர்லாக், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1914)

### சி. வை. தாமோதரம்பிள்ளை



1832 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதி பிறந்த இவர், இளம் வயதிலேயே தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்து தனது பன்னிரண்டாவது வயதில் வட்டுக்கோட்டை செமினறியில் சேர்ந்து, அறிவியல் துறையிலும் பயிற்சி பெற்று அதன் பின்னர் 1852 இல் கோப்பாயில் போதனாசக்தி வித்தியாசாலையில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்தார். 1853 ஆம் ஆண்டு **நீதிநெறி விளக்கம்** என்னும் ஒழுக்க நெறி சார்ந்த தமிழ் நூலொன்றைப் பதிப்பித்ததன் மூலம் 'தமிழ்ப் பதிப்புத்துறை முன்னோடி' எனும் பெருமையையும் பெற்றார்.

இவர், 1853 ஆம் ஆண்டு சென்னை வந்தார். சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகவும் தின வர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமை ஆற்றினார்.

1858 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட முதலாவது கலைமாணி (பி.ஏ.) பட்டத்துக்கான தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் தேறினார். தொடர்ந்து சட்டம் பயின்ற அவர் 1871 இல் ***பி.எல்.*** தேர்விலும் வெற்றி பெற்று வழக்கறிஞராகப் பணியாற்றி 1884 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பின் ஓய்வுபெற்ற தாமோதரம் பிள்ளைக்கு 1895 ஆம் ஆண்டில் அரசினர் 'ராவ் பகதூர்' பட்டமளித்துப் பாராட்டினர்.

பாண்டிய மன்னன் கைகளுக்கே அகப்படாததாக அன்று இழக்கப்பட்டதாய் கருதப்பட்டு வந்த தொல்காப்பியப் பொருளதிகாரம் அர்ப்பணிப்புடனான அவரது கடும் உழைப்பினால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, அச்சிட்டு தமிழ் நாட்டின் பட்டினங்கள் தோறும் அந்நூலை அவர் பவனி வரச் செய்த போது, அதனை மெச்சி வியந்து பாராட்டாதோர் எவரும் இருந்ததில்லை. அவரது அப்பணி ஒன்றுக்காகவே அவர் பிறந்த ஈழத்துக்கு திராவிடம் அன்று நன்றி கூறிப் பாராட்டும் நல்கியிருந்தது. 1.1.1901 இல் சென்னையில் புரசைவாக்கம் பகுதியில் தாமோதரம்பிள்ளை மறைந்தார்.

# பெண்களின் ஆற்றலை எல்லா நிலைகளிலும் அங்கீகரிக்கின்றோமா?



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

**அறிமுகம்**

உலகம் முழுவதிலும் பெண்களின் ஆற்றலும் உள்ளார்ந்த திறன்களும் ஆண்களின் மேலாதிக்க முறைமைகள் மற்றும் செயல்கள் மூலம் மறைக்கப்பட்டு அல்லது குறைத்து மதிப்பிடப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக மனித சமூகம் நன்கு பயன்படுத்தக்கூடிய ஏறக்குறைய அரைப்பங்கான மானிடவளத்தை பயன்படுத்தாது விரயமாக்கி வருகின்றது.

பெண்களின் உரிமை, சுகாதாரம், கல்வி, தொழில் போன்ற பலநிலைகளிலும் அவர்களால் மேற்கிளம்ப முடியாதவாறு சமூக, பொருளாதார நிர்வாக பொறிமுறையமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில்துறை, சுயமுயற்சி என்ற நிலைகளில் ஆற்றல்களுக்கு சமமாக பெண்களை அனுமதிப்பது ஏற்புடையதா என்பது தொடர்பாக இன்றும் வெளிப்படையான கருத்தாடல்கள் இடம் பெறுவதில்லை.

இன்று பெண்களுக்கு உரிமை மற்றும் வாய்ப்பு தொடர்பான முரண்பட்ட நிலைமைகள், தாக்கங்கள் பற்றி கலந்துரையாடுவோம்.

**கண்ணாடிப் போராட்டங்கள்**

பெண்கள் பொருளாதாரம், வியாபாரம், சமூகதளங்கள் போன்ற பலவற்றிலும் செயற்படும் நிலை வளர்த்துள்ளனர். ஆனால் அவர்கள் தமக்கு தென்படுகின்ற பல முன்னேற்றமானதுறைகளை நோக்கி சென்று விடாமல் கண்ணாடி தடைகள் உள்ளன. கண்ணாடி மூலமாக தென்படுகின்ற முன்னேற்றங்களை பார்க்க முடியும், அவாவ முடியும். ஆனால் அவற்றை நோக்கி நகர்வதற்கு கண்ணாடிச் சுவர்கள் அனுமதிப்பதில்லை.

ஆற்றல்கள் மாத்திரம் மனிதர்களின் முன்னேற்றங்களை சாத்தியமானதாக்குவதில்லை. அவற்றை உரியவாறு சரியான சூழலில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் திறந்துவிடப்பட வேண்டும்.

ஆற்றல்மிக்க பெண்கள் தாம் விரும்பும் இலக்குகளை அடைய முடியாதவாறு கவனமாகவும் மென்மையாகவும் கலாசார பூவேலிகளினால் தடுக்கப்பட்டு வருகின்றனர். தோல்வியடைவதிலும் இழந்து நிற்பதிலும் ஒரு பண்பாட்டுப் பெருமை இருப்பதாக சமூக நீதிக்குரல்கள் சொல்லிக் கொண்டே இருக்கின்றன. இதில் திருப்தியடையும் ஆற்றல் கொண்டு தோற்றுப் போவதில் பெருமை கொள்ளும் பெண் சமூகம் உலகம் முழுவதும் பரவிக்கிடக்கிறது.

உலகில் தொழில்புரியும் மானிடபடையில் ஏறக்குறைய அரைப்பங்கினர் பெண்கள்தான். ஆனால் உண்மையான ஊழியப்படையில் மூன்றில் ஒன்றினதும் குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்வதாக உலக வங்கியின் சர்வதேச நாணயநிதி (IMF)யத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்ரீன் லகாடே(Christine lagarde) தெளிவுபடுத்தியுள்ளார்.

பெண்களுக்கு தொழில் தொடர்பாக சமத்துவம் கொடுப்பதில் முன்னேற்றம் ஏற்படுத்தும் முயற்சிகள் எல்லாம் சோடை போய்விட்டன.

ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக தொழிற்படையிலான ஆண்களின் பங்குகொள்வீதம் 80 சதவீதமாகத்தான் உள்ளது. அதனைக் குறைக்கவோ பெண்களின் பங்குகொள் வீதத்தை கூட்டவோ முடியவில்லை.

பெண்கள் கடினமாக உழைக்கிறார்கள். ஆனால் உழைக்கும் வர்க்கமாக அவர்கள் காட்டப்படுவதில்லை; அங்கீகரிக்கப்படுவதுமில்லை. தென்னாபிரிக்கா, மத்தியகிழக்கு போன்ற நாடுகளில் 80 சத வீதமான தொழில் புரியும் பெண்கள் சட்டப்படியான உழைப்பாளர்படையில் இருப்பதாக காட்டப்படுவதில்லை.

தொழிற்படையில் நிறைவான கல்வி ஒப்புமையற்ற திறன்கள் கொண்டவர்களாக பெண்கள் உள்ள போதிலும் அவர்கள் இரண்டாம் தர பிரஜைகளாகவே இன்றும் கணிக்கப்படுகிறார்கள்.

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட ஆண்களை விட 16 சதவீதம் குறைந்த வேதனங்களையே பெறுகின்றனர். ஆனால் சமமான வேலை ஆற்றலுடன் தான் பணியாற்றுகின்றனர்.

தொழிற்றுறைகளில் முகாமைத்துவதுறைகளில் அல்லது மட்டங்களில் பெண்கள் அதிகம் நிராகரிக்கப்படுகிறார்கள். ஐரோப்பிய சங்கத்தினர் கூட்டுநிறுவன மேலாண்மைச் சபைப் பதவிகளில் 14 சத வீதத்திலும் குறைவாகவே உள்ளனர். வசதிகள் மிகவும் கொண்ட கம்பனிகளில் பிரதம நிர்வாக பதவிகளில் 10 சதவீதத்திலும் குறைவாகவே பெண்கள் இடம் பெறுகின்றனர்.

இலங்கையிலும் 17 அரச பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களில் ஒருவர் மாத்திரமே தற்போது பெண்ணாக இருப்பதையும் கவனத்திற் கொள்வது நன்று.

**நம்பிக்கை நோக்கிய நகர்வுகள்**




இயன்றளவு சரியான திசை நோக்கி விரைவாக நகர்வதற்கான பல முயற்சிகள் பெண்களுக்காக மேற்கொள்ளப்படவேண்டும். பால்நிலை சமத்துவம் (Gender Equality) நிலைநிறுத்தப்பட வேண்டியதவசியம்.

எதிர்காலத்தில் விளைதிறன் மிக்க வகையில் இந்த சமத்துவம் உருவாக்கப்பட வேண்டும்.

தோல்விகளிலிருந்து வெற்றிகளின் பக்கம் திறமையாக நகரவேண்டும்; பெண்களை நகர்த்த வேண்டும். இது பல நம்பிக்கைகளுடன் நிகழவேண்டும். அவை,

**வளர்ச்சிக்கு உதவுதல்**

சம்பளம் பெறாத வேலைச்சுமைகளிலிருந்து பெண்களை படிப்படியாக வேதனம் பெறும் வேலை முறைக்கு மாற்ற முடியுமாயின் பொருளாதார அபிவிருத்திக்கான அவர்களது பங்களிப்பு அதிகரித்து விடும்.

ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது கணிப்பில் ஆண்களைப் போல் அதே சதவீதத்தில் பெண்களுக்கான தொழில் வாய்ப்பையும் உயர்த்த முடியுமாயின் 2020 ஆம் ஆண்டில் தமது நாட்டின் மொத்த உற்பத்தி 4 சதவீதம் உயரும் என்று கூறப்படுகிறது. எகிப்தில் இந்த வளர்ச்சி 14 சதவீதமாக அமையும் என்றும் உலக வங்கி கூறுகிறது.

**தொழில் இடர்களில் சமநிலையை பேணுதல்**

பெரிய தொழில் நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் அதிகளவு பெண்கள் நியமிக்கப்பட்டால் விற்பனை அதிகரிக்கும். அதிக இலாபம் கிடைக்கும். பங்குகளுக்கும் அதிக பங்கிலாபம் கிடைக்கும். இது பல நாடுகளில் ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட முடிவு ஆகும். ஏனெனில் இடர்களை ஏற்ப தில் ஆண்களை விடவும் பெண்கள் அதிக எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொள்கிறார்கள்.

**புதிதாக தோன்றும் பெண்களது சந்தைகள்**

உலக கணிப்பீடுகளின்படி உலக சந்தைகளில் மூன்றில் இரண்டு பெண்கள் சார்பில் தான் செலவிடப்படுகின்றன. அமெரிக்காவில் இது 80 சதவீதத்திலும் அதிகமாகும். பெண்களை மையப்படுத்திய சந்தைப்படுத்தல் எத்தனங்கள் தான் எதிர் காலத்தில் வெற்றியளிக்கும்.

**எதிர்கால சந்ததியினருக்காக முதலிடுவதில் பெண்களே முன்னோடிகள்**

தமது குழந்தைகள் எதிர்காலத்தில் சிறப்பாக வாழவேண்டும் என்ற அதீத எச்சரிக்கை உணர்வுடன் சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் பெண்களே அதிகம் முதலிடுகின்றனர். எதிர்கால மனித மூல தனத்தில் முதலிடுவதற்காக இவர்களே உலக நிதிச் சந்தையை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மாற்றங்களின் முகவர்கள் பெண் கள் தான்**

முகாமையாளராக, குடும்பத்தலைவர்களாக, சமூகத் தலைவர்களாக அதிக மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமை பெண்களுக்கு உண்டு.

அதிக ஆற்றலும் ஒன்றிணைந்து செயலாற்றும் திறனும் பெண்களிடம் புதிது புதிதாக வளர்ந்து வருகிறது. ஆனால் அவர்கள் தன்னம்பிக்கையுடனும் உறுதியாகவும் தமது எண்ணங்களையும் கொள்கைகளையும் வெளியிடுவதில்லை. புதியவற்றை துணிவுடன் வெளிப்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இந்த வெளிப்படுத்துவோர் எண்ணிக்கை உயரும் பொது பெரியளவிலான மாற்றங்கள் நிச்சயம் ஏற்படும்.

ஊடகங்களும் கம்பனிகளும் பாராளுமன்றமும் இவற்றை விளங்கிக்கொண்டு பெண்களுக்குரிய சமத்துவத்தை எல்லாத் துறைகளிலும் உருவாக்க வேண்டும்.

வேலைக்கும்- குடும்ப வாழ்வுக்குமிடையில் சமநிலையை இயன்றளவு உறுதிப்படுத்தும் வல்லமை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் என்பதை உலக வங்கியின் ஆராய்ச்சியாளர் (Lily Fang) லிலிஃபாங் தெளிவாக விளக்கியுள்ளார்.

**வீட்டு வேலையாளர் பதவிகள்**

பெண்கள் நன்கு படித்து அலுவலகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் வேலைக்காகச் செல்கின்றனர். அதிகதூரம் செல்வதற்காக அதிகாலையில் சென்று பின் மாலையில் திரும்புகின்றனர். இந்தச்சூழல் உலகம் முழுவதும் வளர்ந்து வருகிறது.

இப்போது **குடும்ப பெண்கள்** என்பவர்களுக்கான பதிலீடுகளாக பல புதிய வேலை வாய்ப்புக்கள் படிக்காத பெண்களுக்கு உருவாகி வருகின்றது.

இந்தப் படிக்காத பெண்கள், நன்கு படித்து வேலை செய்யும் பெண்களை வீடுகளில் பதிலீடு செய்கிறார்கள். வீட்டை ஒழுங்குபடுத்தல், சுத்தம் செய்தல், சமைத்தல், உடைகளைச் சுத்தப்படுத்தல், குழந்தைகளைப் பராமரித்தல், முதியோரைப் பேணுதல், கடிதங்களைப் பெற்றுப் பேணுதல், தேடி வருவோருக்குப் பதிலளித்தல், உரியபோது தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளித்தல், வீட்டு எஜமானிக்கு அவசர தகவல்களை உரியவாறு வழங்குதல் என்றவாறு இவர்களது வேலைப் பட்டியல் நீண்டு செல்கிறது.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு எமது படிக்காத பெண்கள் இத்தகைய வேலைக்காக செல்கின்றனர். டொலர் உழைக்கின்றனர். புதிய நாகரிகம், பழக்கம் கைக் கொள்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறுங்கால கல்வி மற்றும் பயிற்சியை இவர்களுக்கு ஒழுங்காக வழங்கி வருகின்றது.

ஆனால் உள்நாட்டிலும் இதே குடும்ப பணியாள் பதவிகள் பெருகிவருகின்றன. ஆனால் இவர்களுக்கும் ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் கல்வி பயிற்சி வழங்கினால் என்ன? அத்தகைய சான்றிதழ் பெற்றவர்கள் மாத்திரமே வீடுகளில் பணியாளர்களாக முடியும் என சட்டம் இயற்றினால் என்ன?

- சுத்தமான பழக்கங்களை எவ்வாறு பின்பற்றுவது?
- குழந்தைகளின் உளவியலை எவ்வாறு புரிந்து கொள்வது?
- முதியோரை எவ்வாறு மருத்துவ ரீதியில் பராமரிப்பது?
- மின்சார உபகரணங்களை எவ்வாறு அபாயமின்றி கையாள்வது?
- அவசர நிலைமைகளை யாருக்கு, எவ்வாறு தெரிவிப்பது?

இத்தகைய விடயங்களில் கல்வியும் பயிற்சியும் வழங்கி சான்றிதழ் வழங்கலாம். அவர்கள் **பெண்கள் குடும்பப் பணிப் பெண் அமைப்பை** உருவாக்கி முறைமையான தொழில்வாய்ப்பை வடிவமைக்கலாம்.

வெளிநாட்டு குடும்பங்களுக்காக பயிற்சி வழங்கும் நாம் உள்நாட்டு குடும்பங் களின் மேன்மைக்கும் பயிற்சி வழங்கலாம் தானே! எங்களை நாமே தாழ்த்திக்கொண்டே போனால் எப்போது நம் குடும்பங்கள் உயர்வது? பெண்களும் எப்போது கண்ணியமான உழைப்பாளர் படையாக தம்மை மேம்படுத்துவது?

எமது நாட்டு வாழைப்பழங்களை மண்ணில் வைத்துவிற்கும் நாம் வெளிநாட்டு அப்பிள் பழங்களை மேசையில் வைத்து ஆடை போட்டு விற்கிறோம் தானே!

எமது எண்ணங்களை மாற்றுவோம். பெண்களின் ஆற்றலையும் அங்கீகாரத்தையும் உயர்த்துவோம். இணைந்து மேல் எழுவோம்.

# அதிகார பரவலாக்கல் மூலம் தீர்வை வழங்க தயாராகவேயுள்ளோம்

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்யவும் தீர்வை வழங்கவும் தாம் தயாராகவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.**

அத்தோடு வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தான் அனுப்பி வைத்த கடிதத்திற்கு எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை எனவும் கவலையுடன் தெரிவித்தார்.

யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பு வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அக்கடிதத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை கண்காணிப்பாளர்களாக வரவழைத்தல், வடக்கு மாகாண ஆளுநராக சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்தல், 17 ஆவது அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்தல் போன்ற மூன்று விடயங்களை வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால், எனது கடிதத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது வரை எவ்வித பதிலையும் தரவில்லை.

இந்நிலையில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வெளிநாட்டு பிரதிநிதி களை தேர்தல் கண்காணிப்புக்கு அழைத்து வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

அவருக்கு இந்த இடத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஐ.தே.க. எடுத்த முயற்சியினால் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இந்த தேர்தல் காலத்தில் வரவழைக்கப்படவுள்ளனர்.

எனவே அனைத்து வாக்காளர்களும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் எதுவித அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது வாக்களிக்க அனைவரும் முன்வர வேண்டும். வடக்கு மாகாண சபைக்கு இருக்கின்ற பூரணமான ஒரு தேர்தல் இது மட்டுமே. இந்த மாகாண சபை முறைமையை அறிமுகப்படுத்தியது ஐ.தே.க.தான். முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர். ஜெயவர்த்தன காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்வதற்காக இந்த மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது.

இலங்கை- இந்திய உடன்படிக்கை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இருப்பினும் இந்திய இராணுவத்தினருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டத்தில் ஈடுபட்டதனால் இதிலிருந்து விடுதலைப் புலிகள் விலகியிருந்தனர்.

இதேவேளை கடந்த கால யுத்தம் காரணமாக இலங்கை, இந்திய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபை முறைமையை வடக்கு மாகாணத்தில் அமுல் படுத்த முடியாது போனது.

ஆயினும் கடந்த 2003 ஆம் ஆண்டு நான் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்த உடன்படிக்கையின் மூலம் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வரவும் பல முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது வடபகுதி மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியாதபடி செய்யப்பட்டனர்.

1987 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலங்கை- இந்திய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் எனக்கு மக்கள் வாக்குகளை அளித்திருந்தால் இன்று இவ்வளவு துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்திருக்கமாட்டார்கள்.

மேலும் 2009 ஆம் ஆண்டு மீண்டுமொரு மனித உரிமை தொடர்பான உடன்படிக்கை இலங்கையினால் செய்யப்பட்டது.


அத்தோடு சகல இனமக்களும் மத, மொழி பேதமின்றி சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்கும் அதிகாரப்பகிர்வுடன் வாழ வேண்டும் என்பதற்காகவும் அந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த யோசனையை முன் வைத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். அது மட்டுமன்றி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கையிலும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இது வரை அவை எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை. அரசாங்கம் அவற்றில் இருந்து விலகிச் சென்றாலும் ஐ.தே.கட்சி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நடைமுறைப் படுத்தவும் அதிகாரங்களை பரவலாக்கம் செய்யவும் தயாராகவுள்ளது.

மனித உரிமைகள் பாதுகாக்கப் பட வேண்டுமென்ற சமூக நிலைப் பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்த தயாராகவுள்ளோம். தேசிய கொடியை ஏற்றுக் கொள்கின்றோம். சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று இனங்களையும் ஏற்றுக் கொள்வதோடு சகல மக்களின் மதங்களையும் மொழிகளையும் ஏற்றுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# யாழ். முஸ்லிம் மக்களின் இலக்கியச் சொத்து இலக்கிய வீரர் சுபைர் இளங்கீரன்



யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் பெரும் இலக்கியப் பொக்கிஷமாக போற்றிப் புகழப்பட்ட யாழ். இலக்கிய வீரர் கலாபூஷணம் சுபைர் இளங்கீரன் மறைந்து இன்றுடன் 16 வருடங்களாகின்றன.

20ஆம் நூற்றாண்டின் இறுதி ஐம்பதுகளில் அவர் தமிழ் நாவலுக்குப் புதிய பரிணாமத்தைக் கொடுத்தார். முற்போக்கு எழுத்தாளர்களுக்குள் மூத்தவராக மதிக்கப்படும் இளங்கீரன், சரளமாகக் கதை கூறுவதில் வல்லவர். இருபத் தைந்துக்கும் மேற் பட்ட நாவல்களை எழுதிச் சாதனை புரிந்து சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படை களை அணுகித் தீர்வு கூற விழைந்த ஈழத்தின் முதல் நாவலாசிரியராக அவர் மதிக்கப்படுகிறார். இவருக்கு முன்வாழ்ந்த யாழ்ப்பாண முஸ்லிம் இலக்கியவாதிகள் அனைவரும் புலவர்களாகவே இருந்தி ருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் காவியங்களையும் செய்யுள்களையுமே இயற்றியுள்ளனர்.

ஆனால் இளங்கீரன, முதல உரை நடை இலக்கியகர்த்தாவாக மதிக்கப படுகிறார். அவரது பங்களிப்புகள் பல துறைகளில் வியாபித்துள்ளன.

நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள என்பவற்றை ஆக்கியது மட்டுமலலாது பத்திரிகையாள ராகவும் சேவையாற்றியி ருக்கிறார். அரசியல், பொருளாதாரம், சரித்திரம், சமூகப் பிரச்சினைகள் மதம் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவரது இலக்கியப் படைப்புகள் இலங்கையில் மட்டுமல்லாமல் மலேசியா, தமிழ்நாடு முழுவதிலும் சிறப்புப் பெற்றுள்ளன.

இளங்கீரன் படைத்த நாவல்களில் பதினைந்து நாவல்கள் இந்திய மண் வளம் கமழ்பவை. அதில் வண்ணக்கு மரி, நீதிபதி, பைத்தியக்காரி போன்றவற்றை குறிப்பிட்டுக் கூறலாம் அவற்றுடன் இவர் எழுதிய ஈழத்து மண்வளம் கமழும் நாவல்கள் பத் தாகும். அவற்றுள் புயல் அடங்குமா, சொர்க்கம் எங்கே, தென்றலும் புயலும் ஆகிய நாவல்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இலக்கியத்துறையில் மட்டுமல்லாமல் சமுதாய வாழ்விலும் அவர் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து யாழ்ப்பாண முஸ்லிம் வாலிபர்களை இவர் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செனறார். சமூக விவகாரங்களிலும் பொது வேலைகளிலும் தீவிர பங்கேற்றார்.

1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி எம்மை விட்டு பிரிந்து சென்று விட்ட இவரின் நினைவுகளும் அவரது இலக்கியப படைப்புகள் எம்முடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக் கின்றன.

அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால்
யாழ்ப்பாணம்


# வவு.தமிழ்ச் சங்கம் நடத்தும் அருணகிரிநாதர் விழா

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் அருணகிரிநாதர் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் திருமுறையோதல், தமிழ்வாழ்த்துப் பாடலை தமிழிசையரசி அருந்ததி சிவக்கொழுந்துவும் அவரது மாணவர்களும் நிகழ்த்துவர். தொடக்கவுரையை வவுனியா இந்து மாமன்றச் செயலாளர் சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமசாமி ஆற்றுவார். தொடர்ந்து பூந்தோட்டம் துர்க்கா அறநெறிப் பாடசாலை மாணவி மாணிக்கம் துஷாரா **அருணகிரிநாதர்** எனும் தலைப்பிலும் **முத்திக்கொரு வித்து** என்னும் பொருளில் சைவப்புலவர் செ.குணபாலசிங்கம் சிறப்புரையாற்றுவர் . திருப்புகழ் இசையரங்கில் யாழ்ப்பாணம் அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய ஓதுவார் இறையிசையரசு தம்பிராஜா சந்திரதாஸ் பாடுவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக அருணகிரியாரின் பாடல்களின் **ஆழம் அழகு காண்போம்** என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் கருத்தரங்கத்தில் **திருப்புகழ்** பற்றி இந்து நாகரிகத்துறை ஆசிரியர் சிவகஜனும் **கந்தரனுபூதி** பற்றி தமிழ் மணி கே.கே. அருந்தவராஜாவும் **கந்தரலங்காரம்** பற்றி மன்னார் சைவக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்களும் **கந்தரந்தாதி** பற்றி இந்து நாகரிக பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.முருகேசம்பிள்ளையும் **திருவகுப்பு** பற்றி சிவ தட்சணாமூர்த்தியும் கருத்துரைகளை வழங்குவர். (அ)

# மரண அறிவித்தல்

**சண்முகம் ஏகாம்பரநாதன்** (J.P)



உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட **சண்முகம் ஏகாம்பரநாதன்** (J.P) (வலிகாமம் கிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்) *11.09.2013* நேற்று காலை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(3921) **தகவல்: மனைவி**

# ஐ.நாவின் நடவடிக்கைக்கு இலங்கை நன்றி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைப் பாதுகாப்பு சபையின் பிரேரணையான ஆயுத மோதலில் சிறுவர்கள் என்ற பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டமைக்கு இலங்கை அர சாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் 24 ஆவது மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொண்டி ருந்த இலங்கையின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் அளவில் இலங்கை இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந் தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இல ங்கையின் பிரதிநிதிகள் இலங்கையில் இரு ந்து சுமார் 190 சிறுவர் போராளிகள் புனர் வாழ்வளிப்பு க்கு பின்னர் தற் போது பல்கலைக் கழ கங்களுக்கு தெரி வாக இருப்பதாக தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் விடுதலைப் புலிகளில் முக்கிய போராளிகளாக இருந்த போதும் அவர்கள் யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ-2)

# நிரந்தர கட்டடமின்றி இயங்கும் அளம்பில் உபஅஞ்சல் அலுவலகம்

(முல்லைத்தீவு)

**முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளம்பில் உபஅஞ்சல் அலுவலகம் 66 வருடங்களாக நிரந்தரக் காணி, நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது.**

கடந்த 1947 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவ் உப அஞ்சல் அலுவலகம் 2010ஆம் ஆண்டில் இருந்து அளம்பில் தெற்கில் உள்ள தனியார் வீட்டின் அறைஒன்றில்வாடகை பணம் செலுத்தி இயங்கி வருகின்றது.

இவ் உப அலுவலகத்தில் அஞ்சல் அதிபருக்கான விடுதி, மலசல கூட வசதி, கணனி வசதி எவையும் இல்லை.

மேலும் தளபாடவசதியும் இல்லை. இடப் பற்றாக்குறை காணப்படுவதுடன். வாகன தரிப்பிட வசதியும் இல்லை. இவ் அலுவலகத்தில் தபால் அதிபர், மூன்று நிரந்தர ஊழியர், ஒரு பதில் ஊழியர் ஆகியோர் கடமை புரிகின்றனர்.

அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு, செம்மலை, செம்மலைகிழக்கு, உப்புமா வெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 23 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து218 குடும்பங்கள் இவ் அலுவலகத்தையே




பயன்படுத்துகின்றனர்.

இக்கிராமங்களில் உள்ள பிரதான வீதிகளில் தபாற்பெட்டிகள் அமைக்கப்படவில்லை.

எனவே, இவ் உப அலுவலகம் இயங்குவதற்கான சகல வசதிகள் கொண்ட நிரந்தர கட்டடமொன்றை நிரந்தர காணியில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென துறை சார்ந்த அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோளொன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் அத்து மீறி நுழைந்து மீன்பிடி தொழிலில் ஈடுபடும் நடவடிக்கை மீண்டும் ஒருவார காலமாக இடம்பெற்று வருகிறது.

இங்கு 6ஆயிரத்து500 இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழும் நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தமது கடற்பரப்பில் தொடர்வதாக கூறி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை இப் பகுதி மக்கள் மேற்கொண்டனர்.

இதன்போது அது விடயத்தை முல்லைத்தீவு கடற்படையினர் தாம் பொறுப்பேற்பதாக உறுதிமொழி கூறியதை அடுத்தே போராட்டம் முடிவுக்கு வந்தது.

ஆனால், அத்துமீறல் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதன் மூலம் இங்குள்ள மீனவர்களின் மீன்பிடி வலைகள் அறுத்து நாசமாக்கப் படுகின்றன.

கடந்த வாரம் முல்லைத்தீவிற்கு வருகை தந்த கடல் வள அமைச்சரிடம் இது தொடர்பாக தெரிவித்த போது தான் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து இந்திய நிறுவனங்களுடன் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(ம-267)




## இரண்டு வருட கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் நபர் ஒருவரை லொறியால் மோதி மரணத்தை ஏற்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் மரணமடைந்தவரின் மனைவிக்கு 80 ஆயிரம் ரூபா நட்டஈடும் வழங்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

எதிரியான சாரதியின் கவலையீனமே மரணத்துக்கு காரணம் என மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ம)

# தமிழரின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இளையோர்களின் கைகளிலுள்ளது

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இளைஞர், யுவதிகளின் கைகளிலேயே உள்ளது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தல் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இத் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்தியைச் சொல்லப் போகின்றார்கள் என்பதை சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் வாக்குரிமையுள்ள அனைத்து தமிழ் மக்களும் எமது அரசியல் தீர்வுத் திட்டத்தை நோக்கி நகர்வதற்காக கட்டாயம் வாக்களிக்க வேண்டியவர்களாக வுள்ளோம்.

எனவே, எமது மக்களை வாக்களிக்க செய்யவேண்டிய முக்கிய பொறுப்பு இளைஞர், யுவதிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அத்துடன் விளையாட்டுக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், மீனவர் சங்கங்கள், சமய அமைப்புக்கள் மற்றும்சமூக அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, இம் மாகாண சபைத் தேர்தலில் சகல மக்களையும் வாக்களிக்கச் செய்ய வேண்டும்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல இயலாதவர்களையும் வாக்களிக்கச் செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் சில மக்கள் வாக்களிப்பைத் தவிர்த்துவிடுவார்கள். அம் மக்களையும் வாக்களிக்கச் செய்ய, கிராம மட்டத்தில் உள்ள சிறிய, பெரிய வாகன உரிமையாளர்களும் தேர்தல் தினத்தன்று எமது மக்களுக்கு உதவி அவர்களும் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். எனவே, தமிழ் தேசியம் காக்க விரும்பும் அனைத்து தமிழ் மக்களும் உங்கள் வரலாற்றுக் கடமையைச் செய்து தமிழரின் வெற்றியை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-250)

# மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுகின்றன

### மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை ஊடாக ஒட்டுசுட்டான் செல்லும் ஏ-34 பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள தேக்கங்காடுகளில் உள்ள தேக்க மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இச் செயற்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதன்மூலம் பெறுமதியான வளங்கள் நாளுக்கு நாள் சுரண்டப்பட்டு வருகின்றன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தாது இருப்பதற்கு காரணம் என்னவென அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் உடன் விரைந்து செயற்படுமாறு அப் பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றையும் முன் வைத்துள்ளனர். (ம-267)

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கும் மலேசியாவுக்கும் அனுப்புவதாக கூறி 18 இலட்சம் ரூபாபணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றிய முல்லைத்தீவு, கள்ளப்பாட்டு பகுதியை சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்து ஆஜர்படுத்தியவேளை அவ்விருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படிநபர்களில் ஒருவர் பயணிகளை சிலாவத்துறையில் வைத்து ஏற்றிக் கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம்)



துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிலையில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான ஆசி வழங்கல் மற்றும் விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் துணுக்காய் கல்வி வலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் மற்றும் கல்வி அதிகாரிகளுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

(படம்:- மல்லாவி செய்தியாளர்)

## ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பகுதியில் பேருந்தில் சென்று கொண்டிருந்த வேளை பெண் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக் கூறி ஆஜர்படுத்தப்பட்ட 24 வயது நிரம்பிய நபர் ஒருவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருடங்களுக்கு கடூழியச் சிறைத் தண்டனையும் நட்டஈடாக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூபா 10 ஆயிரமும் வழங்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (ம)

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓரிடம் உண்டாக்கிக்கொள்ளும்

– எமர்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் என்றால் கலகலப்புத்தான் மதில் சுவர்கள் பேசுகின்றன

சுவர்களுக்கும் காது உண்டு என்றொரு பழமொழி தமிழில் உள்ளது. சுவருக்கு காது உள்ளதா என்று கேள்வி கேட்டு குழம்பிக்கொள்ளாமல் மதில் சுவர்களுக்கு வாயிருந்து அவை பேசினால் நிலைமை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்தோம்.

ஆம், தேர்தல் காலத்தில் மதில்கள் தங்களுக்குள் பேசுகின்றன. முன்வீட்டு மதில் சுவர் தன் எதிர்வீட்டு மதிலுக்கு கதை சொல்கிறது.

மதில் 1 : நேற்றுமுன்தினம் நடந்த சம்பவம் தெரியுமோ?

மதில் 2 : என்ன நடந்தது?

மதில் 1 : நேற்று முன்தினம் நடுச்சாமம் இருக்கும். ஒரு வாகனம் திடீரென்று எனக்கு ஓரமாக வந்து நின்றது. மூன்று நான்கு பேர் அந்தவாகனத்திலிருந்து குதித்து எனக்கு அருகில் வந்தனர். அட, சலம் கழிப்பதற்காக ஒதுங்கும் பழக் கத்தில் வருகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் அதுதான் இல்லை.

ஒருவர் வாளியில் கோதுமை மாக்கரைசலை வைத்திருந்தார். மற்றையவர் அதைத் தொட்டு என்மேல் பூசினார். எனக்கு ஒரே பயம். நடுச்சாமத்தில், என்மீது ஏன்தான் கோதுமை மாக்கரை சலை பூசுகிறார்கள். கடந்த மாதம் தான் என் எஜமான் என்னை தூய்மைப்படுத்தி வர்ணம் பூசி மகிழ்ந்திருந்தார்.

இப்போது இவர்கள் ஏன்தான் என்மீது மாக்கரைசலை பூசுகிறார்கள் என்று நினைக்கையில், இன்னொருவர் பெரியதொரு சுவரொட்டியை என்மீது ஒட்டிவிட்டுச் சென்றார்.

அந்த நேரத்தில் ஏற்பட்ட சலசலப்பில் என் வீட்டு எஜமான் விழித்துவிட்டார். கூடவே எஜமாட்டியும் எழுந்திருந்தார். என்னப்பா! ஏதோ சத்தம் கேட்கிறது கேற்றைத் திறந்து பாருங்களேன் என்று என் எஜமாட்டி அம்மா கூற, சும்மா இரு. என்ன நடந்தாலும் விடியத் தெரியும். என்ர இதயம் படபடவென்று அடிக்கிறது. போட்ட பிரசர் குளிசையும் வேலைசெய்யவில்லை என்று எஜமான் கூற, வீட்டில் ஒளிர்ந்துகொண்டிருந்த மின் குமிழ்களும் நிறுத்தப்பட்டன.

அட, இப்படியும் பயமோ என்று எனக்குள் நினைத்திருந்தபோது என்னைப் பார்த்து ஒருவர் கூப்பிய கரத்துடன் காட்சிதந்தார்.

ஏன்தான் இந்தாள் கும்பிடுகிறார். முன்பின் கும்பிடாத குறைதீர்க்க இப்படியும் ஒரு விரதமாக்கும் என்று நினைத்தேன்.

விடியல் பொழுதில்தான் தெரிந்தது அவர் வாக்குக் கேட்டு கும்பிடும் சங்கதி.

சரி, தேர்தல் என்றால் இவர்களுக்கு எங்கள் மீது தானே பாசமும் பசையும். கும்பிடட்டும் என்று விட்டால், நேற்றிரவு இன்னொரு பகுதியினர் அதேபோல் வந்திறங்கி ஒட்டியிருந்த சுவரொட்டிக்கு மேல் தங்கள் சுவரொட்டிகளை ஒட்டிவிட்டுச் சென்றுள்ளனர். அட, இந்த முறை வடக்குத் தேர்தல் சூடு பிடிக்கும் போலத்தான் இருக்குது.

மதில் 2 : தேர்தல் சூடுபிடித்தால் பரவாயில்லை உனக்கும் எனக்கும் சூடுபிடித்தால் தான் பிரச்சினை.

மதில் 1 : அது சரி உன்னில ஏன் ஒருவரும் சுவரொட்டியை ஒட்டவில்லை.

மதில் 2 : நான் சுயேட்சைக் குழுவுக்கு சப்போட். சுயேட்சைக் குழுக்கள் இன்னமும் மதில் சுவரில் ஒட்டவில்லை.

மதில் 1 : ஏன் அப்படி?

மதில் 2 : சுவரில் ஒட்டினால் தங்களுக்கு எதுவும் சுவறாது என்பதால் தான்.

மதில் 1 : அட சங்கதி அப்படியோ! நீ தப்பிக் கொண்டாய். நான் மாட்டிக்கொண்டேன்.

# ஜனநாயக சம்பிரதாயங்களை புறந்தள்ளியுள்ளார் சம்பிக்க!

### அமைச்சர் வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து, அமைச்சர் சம்பிக்க ரணவக்க விலகியமையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக சம்பிரதாயங்களை புறம்தள்ளும் நடவடிக்கை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் வாசு தொடர்ந்து மேலும் தெரிவிக்கையில், அமைச்சர்சம்பிக்கரணவக்கநாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் பணிகள் தொடர்பில் அவருக்கு எந்தப் புரிதலும் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

மக்களுக்கு அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான யோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வேண்டும் என்றோ அல்லது அதனை புரிந்துகொள்ளாமலோ அந்த விடயத்தை மறந்து செயற்பட்டுள்ளார்.

அரசியல் அமைப்பில் இருக்கும் இரண்டு விடயங்களை எதிர்வரும் 21 ஆம்திகதிக்குள்மாற்றியமைக்கும்தேவையின் அடிப்படையில் தான்தோன்றித்தனமாக இவ்வாறான நடவடிக்கையை அவர் எடுத்திருந்தாலும் அரசியலமைப்பில் உள்ள விடயங்களை மாற்றியமைக்க அதிகாரமில்லை.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக 13ஆவது அரசியலமைப்புத்திருத்தச் சட்டத்தில் உள்ள காணிமற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்க வேண்டும் என சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ–1)

# இன மதவாதம் இல்லாத அரசை ஐ.தே.கட்சியே முன்னெடுக்கும்

### ரவி எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யானைக்கு போடும் புள்ளடி, வெற்றிலைக்கு கொடுக்கும் பொல்லடியாக அமையவேண்டும் எனத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

யாழ்.நல்லூர் சங்கிலியன் தோப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாத அரசாங்கத்தை நடத்தக் கூடியது ஐ.தே.க. மட்டுமே அத்தோடு ஆட்சியை அமைக்கக் கூடிய பலமும் எமது கட்சிக்கு உண்டு.

ஜனநாயகம், சுதந்திரம், சகல மக்களுக்கும் சம உரிமை என்பதனை வழங்கக் கூடியது எமது கட்சியே.

தற்போது இந்த நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

விவசாயம் கடற்றொழில் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நாட்டிலுள்ள இனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் தீர்த்து வைக்கப்படும்.

அத்தோடு ஐக்கியத்தையும் தேசியத்தையும் வலியுறுத்தி நிற்பதும் எமது கட்சியே.

எனவே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எமது கட்சிச் சின்னமான யானைச் சின்னத்துக்கு இடும் புள்ளடிகள் ஒவ்வொன்றும் அரசாங்கத்தின் வெற்றிலைச் சின்னத்துக்கு விழும் பொல்லடியாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி மேலும் தெரிவித்தார். (அ–6)

# இந்தியக் கடற்படைப் படகுகள் இலங்கையில் சோதனையோட்டம்

இலங்கையிடமிருந்து இந்தியா கொள்வனவு செய்யவிருக்கும் அதிவேக இடை மறிப்புப் படகுகள் சோதனை யோட்டத்தில் விடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்தியக் கடற்படையிடம் கையளிப்பதற்கு முன்னதாக இந்தச் சோதனை யோட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

சோலாஸ் மெரைன் சேவிஸ் நிறுவனத்திமிருந்து இந்தியக் கடற்படைக்கு 80 அதிவேக இடைமறிப்புப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கான 46 மில்லியன் டொலர் பெறுமதியான உடன்பாடு ஒன்று 2011 இல் செய்து கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக் கடற்படையின் சிறப்புப் படகுத் தாக்குதல் அணி பயன்படுத்திய படகுகளை ஒத்த இந்தப் படகுகள் விரைவில் இந்தியக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

16 மீற்றர் நீளமும் நவீன ஆயுதங்களும் பொருத்தப்பட்ட இந்தப் படகுகள் ஒவ்வொன்றிலும்4 அல்லது 5பேர்ரோந்து செல்ல முடியும்.

இலங்கை யிடமிருந்து இந்தியா ஆயுத தளபாடங் களைக் கொள்வனவு செய்துள்ளதாக அண்மையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்ரனி நாடாளு மன்றத்தில் தகவல் வெளியிட்டிருந்தார்.

ஆனால், இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய அதனை முற்றாக நிராகரித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ–2)

## சத்திய தரிசனம்



புறச் சடங்குகளை மென்மேலும் நீங்கள் குறைத்துக் கொள்ளவேண்டும். புற செயற்பாடுகளில் இருந்து மென்மேலும் நீங்கள் உங்களுடைய கவனத்தை விலக்கிக் கொள்ளவேண்டும். நீங்கள் எடுத்துக்காட்டுக்களாக திகழவேண்டுமேயன்றி பகட்டாக அனைவரும் காண்பதற்கான அணி வகுத்திடக்கூடாது. உரத்துப் பஜனை பாடுவது அல்லது நீண்ட நேரம் தியானம் செய்வது அல்லது கவனத்தைக் குவிப்பதற்குச் செய்யப்படும் சாதனையாகிய உருத்திராட்ச மாலையை உருட்டுவது போன்றன அந்தக் காலத்துக்கு வேண்டுமாயின் வம்பு, பழி போன்ற பேச்சுக்களை தவிர்க்கவும் இழிவான பேச்சு விவாதம் நிரம்பிய பேச்சு ஆகியவற்றைத் தடுக்க உதவிடும். ஆனால் அவை உங்களை முன்னே கொண்டு செல்லவோ அல்லது அகத்துள் கொண்டு செல்லவோ உதவிடாது. அவை உங்களைப் பின் நோக் கியும் கூட இழுத்துச் செல்லலாம். மற்றவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான பகட்டு மற்றும் ஆடம்பரமான சடங்குகள் இந்திய ஆன்மீகத்தின் நற்பெயரைக் களங்கப்படுத்திவிடும்.

உங்கள் முகங்கள் என்றும் புன்னகையேயே பொழியட்டும். அது குழந்தைகளின் மகிழ்ச்சியான மனங்களைக் காண்பதன் வாயிலாக நீங்கள் பெற்ற பேரானந்தத்திலிருந்து அவை ஊற்றெடுக்கட்டும். கோபம், பொறாமை, பெருமிதம் எனும் தளைகளில் சிக்காதீர்கள்.

## லிற் எக்ஸ்-2013 கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த ஆங்கில இலக்கியத்துறை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள லிற் எக்ஸ்– 2013 கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமையும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை புதிய கலைப்பீட கட்டட 106, 107 ஆம் இலக்க கூடங்களில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் ஆங்கில இலக்கிய துறைசார்ந்த வரலாற்றுப் பதிவுகள், விபரணப்படங்கள், சுயசரிதைகள், மாதிரிகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளன.

இரு தினங்களிலும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் துறை சார்ந்தோர் அனைவரும் கலந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–5)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### திதி கொடுப்பது யாருக்காக?

இறந்தவர்களுக்கு திதி போன்றவை செய்யலாமா என்றால் செய்யலாம். எதற்காக? உங்கள் தாத்தாவோ, அப்பாவோ யாராவது இறந்திருந்தால் நம் முன்னோர்களை நினைத்து திதி கொடுக்கலாம். அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் அவர்களை நீங்கள் விரும்பலாம். விரும்பாமல் இருக்கலாம். இந்த உடலைக் கொடுத்தவர்கள் அவர்கள்தானே. நாம் உலகில் வாழ்வதற்கு முக்கியமான உடலைக் கொடுத்ததற்கு இதயத்தில் நன்றியுணர்வு காட்ட வேண்டாமா?

வருடத்திற்கு ஒருமுறையாவது அவர்களின் நினைவாக ஏதாவது செய்யவேண்டும். அவர்களின் நினைவுநாளில் காகம், பசு போன்றவற்றிற்கு உணவிடுவது மிகவும் நல்லது. அவ்வாறு செய்வது உங்களுக்கு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். ஏழைய எளியவர்களுக்கு 50, 100 பேருக்கு அன்னதானம் வழங்கலாம். நீங்களே சமைத்து உங்கள் கையாலே ஏழைகளுக்குப் பரிமாறுங்கள். நீங்களும் சாப்பிடுங்கள். இப்படிச் செய்தால் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடையும்.

# இந்திய அணியின் நியூசிலாந்து சுற்றுப் பயணம்

இந்திய கிரிக்கெட் அணியின் நியூசிலாந்து சுற்றுப் பயண விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மாதங்களில் இந்திய அணி நியூசிலாந்தில் 5 ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது.

இந்தப் போட்டி விவரம் வருமாறு:

ஜனவரி 19: முதல் ஒருநாள் போட்டி (நேப்பியர்)

ஜனவரி 22: 2ஆவது ஒருநாள் போட்டி (ஹேமிலிடன்)

ஜனவரி 25: 3ஆவது ஒருநாள் போட்டி (அக்லாந்து)

ஜனவரி 28: 4ஆவது ஒருநாள் போட்டி (ஹேமில்டன்)

ஜனவரி 31: 5ஆவது ஒருநாள் போட்டி (வெலிங்டன)

பெப். 2:3: பயிற்சி ஆட்டம்

பெப். 6:10: முதல் டெஸ்ட் (அக்லாந்து)

பெப். 14:18: 2ஆவது டெஸ்ட் (வெலிங்டன்)




# ஒலிம்பிக் சபையின் புதிய தலைவராக தாமஸ்பாக்

சர்வதேச ஒலிம்பிக் சபையின் புதிய தலைவராக ஜேர்மனியை சேர்ந்த தாமஸ் பாக் தேர்வு செய்யப்பட்டார்.

சர்வதேச ஒலிம்பிக் சபையின் (ஐ.ஓ.சி.,) தலைவராக 12 ஆண்டுகள் பணியாற்றிய பெல்ஜியத்தின் ஜாக்ஸ் ரோகி விடைபெற்றார். இதையடுத்து, ஆர்ஜென்டீனா தலைநகர் பியுனஸ் ஏர்சில் நடைபெற்ற ஐ.ஓ.சி., பொதுக் குழு கூட்டத்தில் புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. தாமஸ் பாக், முன்னாள் போல் வால்ட் வீரர் செர்ஜி புப்கா (உக்ரைன்), ரிச்சர்ட் கேரியன (பியர்டோ ரிக்கோ), செர் மியாங்(சிங்கப்பூர்), டெனிஸ் ஆஸ்வால்டு(சுவிட்சர்லாந்து), சிங்-கிவு(சீன தைபே) ஆகியோர் போட்டியிட்டனர். இதில் சிங்-கிவு முதல் சுற்றில் வெளியேற்றப்பட்டார். இரண்டாவது சுற்றில் 49 வாக்குகளுடன் தாமஸ் பாக் வெற்றி பெற்றார். இதற்கு, குவைத் ஐ.ஓ.சி., உறுப்பினர் ஷேக் அகமது அல்-சபாவின் பிரசாரம் முக்கிய காரண மாக அமைந்தது. இரண்டாவதாக வந்த கேரியன் (29 ஓட்டு) உள்ளிட்ட மற்றவர்கள் வாய்ப்பை இழந்தனர்.



**தங்கம் வென்றவர்:**

கடந்த 1976இல் நடைபெற்ற ஒலிம்பிக் வாள்சண்டை போட்டியில் அணிகளுக்கான பிரிவில் தங்கம் வென்றவர் தாமஸ் பாக். இதன் மூலம் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஒருவர் முதல் முறையாக ஐ.ஓ.சி., தலைவ ராகிறார். இவர் இப்பதவியில் 8 ஆண்டுக ளுக்கு நீடிப்பார்.

# நேபாள கிரிக்கெட் சங்க ஆண்டு விழா மலரின் அட்டைப் படத்தில் சேவாக்

நேபாள கிரிக்கெட் சங்க (சி.ஏ.என்.,) ஆண்டு விழா மலரின் அட்டைப்படத்தில் சேவாக் படத்தை வெளியிட்டுள்ளது.

சி.ஏ.என்., சார்பில் இந்த ஆண்டுக்கான மலர் வெளியிடப்பட்டது. இதில் வெளியான படங்கள் குறித்து நேபாள கிரிக்கெட் நிர் வாகிகள் அக்கறை செலுத்தவில்லை. இதன் காரணமாக அட்டை படத்திலேயே தவறு நடந்தது. நேபாள அணியின் சீருடையில் இந்திய வீரர் சேவாக்கின் 'ஆக்ஷன்' படம் பிரசுரிக்கப்பட்டு இருந்தது.

இதில் சேவாக் முகம் இலேசாக மறைக்கப பட்டுள்ளது. இருப்பினும், இது சேவாக் தான் என்பது தெளிவாக தெரிந்தது. இதனால், உள்ளூர் நேபாள வீரர்கள் கொதிப்படைந்த னர். முன்னாள் வீரர் ராஜு பஸ்னயாத் கூறுகையில்,

நேபாள கிரிக்கெட் நிர்வாகிகள் தங்கள் நாட்டு வீரர்களை புறக்கணித்தது பெரும் அவமானம்,என்றார்.

இதனை மறுத்த சி.ஏ.என்., தலைமை சபை உறுப்பினர் கிரன் ராணா கூறுகையல்,

அட்டையில் உள்ளது சேவாக் படம் தான். நன்கு கூர்ந்து கவனித்தால், இவரது முகம் இலேசாக மறைக்கப்பட்டு இருக்கும். வேண்டு மென்றே இதை செய்யவில்லை. முழுவதும் எங்கள் தரப்பில் நடந்த தவறு தான்.

சேவாக்கிற்கு நேபாளத்தில் அதிகமான ரசிகர்கள் உள்ளனர். இதை அச்சிட்ட உரிமை யாளர் கூட சேவாக் ரசிகராக இருந்திருக்க லாம். உணர்ச்சி வசப்பட்டு இப்படி செய்துள்ளார்.


**விற்பனை இல்லை**

இந்த ஆண்டு மலரை நாங்கள் விற்க வில்லை. ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது. ஏற்கனவே, 150 பிரதிகள் விநியோகம் செய்யப்பட்டு விட்டதால், சேவாக் படத்தை மாற்றிவிட்டு, மீண்டும் அச்சிடும் வாய்ப்பு இல்லை.

தவிர, சி.ஏ.என்.,க்கும், இந்திய கிரிக் கெட் சபைக்கும் (பி.சி.சி.ஐ.,) நல்ல நட்புறவு உள்ளது. தனது மனைவி சாக்ஷியுடன் நேபாளம் வந்த இந்திய அணித் தலைவர் தோனி, பசுபதிநாத் கோயிலில் பிரார்த்தனை செய்தார். இவரை, நேபாள கிரிக்கெட்டின் தூதராக கடந்த ஆண்டு நியமித்தோம். இதற்காக அவர் ஒரு ரூபாய் கூட சம்பளம் வாங்காமல், பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

இவ்வாறு கிரன் ராணா கூறினார்.

# மேற்கிந்தியத் தீவுகள் 'ஏ' அணிக்கு எதிரான ஆட்டத்தில் கம்பிர், சேவாக், சஹீர்கான்






மேற்கிந்தியத் தீவு ஏ அணிக்கு எதிராக 4 நாள் டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ள இந்திய ஏ அணியில் ஷேவாக், கம்பீர், சகீர்கான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவு ஏ கிரிக்கெட் அணி எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்திய ஏ அணிக்கு எதிராக அதிகாரப்பூர்வமற்ற 3 ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் மூன்று டெஸ்ட் (4 நாள் ஆட்டம்) போட்டிகளில் பங்கேற்கிறது.

இதற்கான இந்திய அணிகள் தனித்தனியாக அறிவிக்கப்பட்டன. இதில் மேற்கிந்தியத் தீவு ஏ அணிக்கு எதிராக ஷிமோகா , ஹப்ளி ஆகிய இடங்களில் நடைபெறும் கடைசி இரு டெஸ்டில் விளையாடும் இந்திய ஏ அணியில் மூத்த வீரர்கள் ஷேவாக், கவுதம் கம்பீர், ஜாகீர்கான் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தொடரில் சிறப்பாக விளை யாடும் பட்சத்தில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் இடம் கிடைக்கலாம். வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர் கான் தனது உடல்த்குதியையும் நிரூ பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.




கடைசியாக ஜனவரி மாதம் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்டில் ஆடிய யுவராஜ் சிங்கும், தேசிய அணியில் மீண்டும் இடம் பிடிக்க போராடி வருகிறார். அவர் ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் போட்டியில் களம் காணும் இந்திய ஏ அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# உலகக் கிண்ண காற்பந்து தகுதிச் சுற்றுப்போட்டியில் ஸ்பெயின் வாகை

பின்லாந்துக்கு எதிரான உலக கிண்ண காற்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில், ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.


பிரேசிலில், அடுத்த ஆண்டு ஆண்களுக் கான 'பிபா' உலக கிண்ணக் காற்பந்து தொடர் (2014, ஜுலை 12 - ஜுலை 13) நடை பெறவுள்ளது. இத்தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள், ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, ஓசியானா, தென் அமெரிக்கா, வடக்கு/மத்திய அமெரிக்கா அண்டு கரீ பியன் என 6 பிரிவுகளாக உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கிறது.

ஐரோப்பிய பிரிவில், 53 அணிகள் ஒன் பது பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடு கின்றன. "ஐ" பிரிவில் நேற்று நடைபெற்ற லீக் போட்டியில் ஸ்பெயின், பின்லாந்து அணி கள் மோதின. அபாரமாக ஆடிய ஸ்பெயின் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் சார்பில் ஜோர்டி ஆல்பா (19ஆவது நிமிடம்), ஆல்வரோ (86ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர்.



'ஏ' பிரிவில் நடந்த ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான போட்டியில், பெல்ஜியம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. செர்பியா, குரோஷியா அணிகள் மோதிய மற்றொரு 'ஏ' பிரிவு போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

# நியூசிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா



நியூசிலாந்து ஏ அணிக்கெதிரான இரண்டாவது போட்டியில்இந்திய ஏ அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து ஏ அணி அதிகாரப்பூர்வமற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றது: இரு அணிகள் மோதிய இரண்டாவது போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் அணித்தலைவர் உன்முக்த் சந்த் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47.2 ஓவரில்216 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

லூக் ரோஞ்சி, அணித்தலைவர் எல்லிஸ் ஆகியோர் தலா 34 ஓட்டங்களும், கார்ல் கசோபா 80 ஓட்டங்களும் எடுத்தனர். இந்தியா சார்பில் அசோக் மனேரியா 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதனையடுத்து 217 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய ஏ அணி 4 விக்கெட் இழப்பிற்கு தனது வெற்றி இலக்கை அடைந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

உன்முக்த் சந்த், மன்தீப் இருவரும் அரைசதம் கடந்து தலா 59 ஓட்டங்களும், ஜாதவ் 30 ஓட்டங்களும், மனேரியா 37 ஓட்டங்களும எடுத்தனர்.

இதையடுத்து, 2:0 என்ற முன்னிலையுடன், ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றியது.

## சச்சினுக்கு பிரியாவிடை மும்பை அணி ஏற்பாடு

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினுக்கு பிரமாதமான பிரியாவிடை அளிக்க மும்பை இண்டியன்ஸ் அணியினர் முடிவு செய்துள்ளனர்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் 200-வது டெஸ்ட் ஆடிய பிறகு ஓய்வு பெற்றுவிடுவார் என பரவலாக பேசப்படுகிறது.

இதற்கு முன்பாகவே மும்பை இண்டியன்ஸ் அணி வீரர்கள், சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்று அவரது கையில் கொடுத்து பிரமாதமாக பிரியாவிடை அளிக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் சம்பியன்ஸ் லீக் போட்டியில், மும்பை இண்டியன்ஸ் அணி பங்கேற்க உள்ளது.

இதுவே சச்சினுக்கு கடைசி சம்பியன்ஸ் லீக் போட்டித் தொடராக இருக்கும் என்பதால் அவருக்குக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்து சிறப்பாக வழியனுப்பி வைக்க மும்பை இண்டியன்ஸ் அணியினர தயாராகி வருகின்றனர்.

ஏற்கெனவே சச்சின் ஐபிஎல் போட்டிகளில் இருந்தும், ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




## 8 வயதில் கிரிக்கெட்டில் கலக்கும் சிறுவன்

கங்கா லீக் கிரிக்கெட் தொடரில் 8 வயதில்இடம்பெற்று முஷீர்கான்என்ற சிறுவன் சாதனை படைத்துள்ளான்.

மும்பை கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் (எம்.சி.ஏ) கடந்த 1948ம் ஆண்டு முதல் கங்கா லீக் கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகிறது.

இத்தொடரில் 10 வயதில் விளையாடி சாதனை படைத்தவர் சர்ப்ராஸ். இதனை முறியடித்துள்ளான் சர்ப்ராஸின் சகோதரர் முஷீர்கான்.



அதாவது 8 வயதில் ஸ்போர்ட்ஸ் பீல்டு கிரிக்கெட் கிளப் அணியில் இடம் பெற்று தற்போது விளையாடுகிறார்.

ராஜவாதி அணிக்கு எதிரான முதல் போட்டியில், ஒரு மணி நேரம் களத்தில் நின்று 42 பந்துகளில் 4 ஓட்டங்கள் எடுத்தான்.

7 ஓவர்கள் பந்துவீசிய முஷீர், 20 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார்.

## பாகிஸ்தானுக்கு எதிரான தெ. ஆபிரிக்க குழாம் அறிவிப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டு பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளிலும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் பங்கு பற்றவுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் குழாம்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்கள்:**

**டெஸ்ட்:** கிறேம் ஸ்மித், ஹசிம் அமலா, ஏபி.டி.வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, பஃப் டு பிளெஸிஸ், டீன் எல்கர், இம்ரான தாஹிர், ஜக்ஸ் கலிஸ், றோறி கிளெய்ன வெல்ட்ற், மோர்னி மோர்க்கல், அல்விரோ பீற்றர்சன், றொபின் பீற்றர்சன், வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன், தமி சொலக்கிலே

**ஒருநாள் சர்வதேசப் போட்டி:** ஏபி.டி.வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, குயின்டன் டீ கொக், ஜே.பி.டுமினி, பஃப்டு பிளெஸிஸ், இம்ரான் தாஹிர், றயன் மக்லரன், டேவிட் மில்லர், மோர்னி மோர்க்கல், றொபின் பீற்றர்சன், வேர்ணன் பிலாந்தர், கிறேம் ஸ்மித், டேல் ஸ்ரெய்ன், லொன்வபோ சொற்சொபி.

## நள்ளிரவில் மனைவி, ...

லோகேந்திரன் திவேயினி (வயது - 18) என்பவருமே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த குடும்பத்தில் மனைவியும், கணவனும் ஒரு வருடகாலமாக குடும்பப் பிரச்சினை காரணமாக பிரிந்து வாழ்கின்ற நிலையில் 3 பிள்ளைகளின் தகப்பனான லோகேந்திரன் மறுமணம் முடித்து திருகோணமலையில் வசித்து வந்துள்ளார்.

லோகேந்திரனும் ஜெயமேரியும் பிரிந்து வாழ்ந்து வருகின்ற போதிலும் இருவருக்குமிடையில் இடைக்கிடையே சண்டைகள் இடம்பெற்று வருவதோடு கொடிகாமத்திலுள்ள ஜெயமேரியின் வீட்டிற்கு வந்து தகராறிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு வேளை யாருக்கும் தெரியாமல் அங்கு வந்த அவர் ஆழ்ந்த நித்திரையில் குடிசையில் தூங்கிக் கொண்டிருந்த தனது மனைவியினை கத்தியினால் குத்தியுள்ளார்.

இதன்போது கத்திக்குததுககுள்ளாகிய ஜெயமேரி தூக்கத்திலிருந்து திடுக்கட்டு எழுந்ததோடு அவரருகில் தூங்கிக கொண்டிருந்த 3 பிள்ளைகளும் தூக்கத்திலிருந்து விழித் தொழுந்துள்ளனர்.

இதன்பின்னர் தமது தாய்க்கு இரண்டாவது கத்திக்குத்து விழுவதனைப் பார்த்த பிள்ளைகள் அவலக்குரல் எழுப்பியதோடு தமது தாயின் உயிர்காக்க தந்தையோடு போராடியுள்ளனர்.

இதன்போது மூத்த பிள்ளையான திவேயினி தனது தாயினை காப்பாற்ற தந்தையோடு மிகக் கடுமையாக போராடியுள்ளார்.

இதனால் தன்னோடு போராடிய மூத்த மகளினையும். அவர் கத்தியால் குத்தியுள்ளார். இதனைப் பார்த்த 10 மற்றும் 4 வயதுடைய ஏனைய இரு சகோதரர்களும் அவலக்குரல் எழுப்பியவாறு வீட்டிலிருந்து வெளியே ஓடிவந்த தமது தாயினையும், அக்காவினையும் காப்பாற்றுமாறு கதறியுள்ளனர்.

அயலவர்கள்அக்குரல் கேட்டு அங்கு வருவதற்கிடையில் இருவரினையும் கொலை செய்துவிட்டு கொலையாளி தப்பிச் சென்றுள்ளார்.

அயலவர்கள் அங்கு வந்து பார்த்த போது தாயும் பிள்ளையும் தலையணைக்கு அருகில் உயிரற்று இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் காணப்பட்டுள்ளனர்.

உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதனை யடுத்து கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர் நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு வருகை தந்த சாவகச்சேரி நீதவான் லெனின் குமார் சடலங்களினை பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலத்தினை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவ இடத்தில் கொலைத் தடயங்களினை பார்வையிட் சட்ட வைத்திய அதிகாரி சிவரூபனின் மேற்பார்வையில் சடலம் இரணடும் பொலித்தீன்களால் கட்டப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

கொலைச் சந்தேகநபரான லோகேந்திரன் இதுவரை (நேற்று பிற்பகல்வரை) கைது செய்யப்படவில்லை எனவும் அவர் தலை மறைவாகியுள்ளார் என கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-4,85)

# இலங்கைக்கு போர்....

இதற்கு தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சி தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த எதிர்ப்புக் குறித்து பிரதமரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

இந்நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நேற்று எழுதிய கடிதத் தில் கூறியிருப்பதாவது,

இலங்கைக்கு இந்தியா 2 போர்க் கப்பல்கள் வழங்க முடிவு செய்திருப் ப தாக மத்திய இணை அமைச்சர் கூறி யதாக செய்தி வெளியாகி உள்ளது.

இந்த தகவலை பார்த்ததும் நான் கடும் அதிர்ச்சியடைந்தேன்.

இந்தியா வழங்கும் போர்க் கப்பல் களை இலங்கை அரசு, தமிழக மீன வர்களுக்கு எதிராக பயன்படுத்தும்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழக மீனவர்களின் மனதை புண் படுத்தும் செயலாகும்.

இலங்கைக்கு போர்க்கப்பல்கள் வழ ங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டு இருந் தால் அதனை ரத்து செய்ய வேண்டும். போர்க் கப்பல் வழங்கும் பிரச்சி னையில் பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வே ண்டும்.

இவ்வாறுஜெய லலிதா குறிப் பிட்டுள்ளார். (செ-11)

After A/L 2013...
75% நேரடி கட்டணக் கழிவு
கணினி ஆங்கில கல்விக்கு
வேலை வாய்ப்பு உத்தரவாதத்துடனான கற்கைநெறிகள்
சர்வதேச, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
அனைத்து கிளைகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
14/9/2013 காலை
16/9/2013 9.30
தரமானதும் முழுமையானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, Tel. 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி.(HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் No.130, கே. கே. எஸ் வீதி. (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970

DIPLOMA IN ENGLISH
ஆங்கில மொழியில் பூரண பயிற்சி
A/L பரீட்சையின் பின்னர்
நீங்கள் எங்கு சென்றாலும் ஆங்கில மொழியினை கற்கமுடியும் ஆனால் எங்களிடம் மட்டுமே பேசமுடியும் என்பது நிருபிக்கப்பட்ட உண்மை.
மொழியைக் கற்பித்தலுக்கான விசேட
ENGLISH LAB
எமது ஆங்கிலப் பாடநெறியில் இணைபவர்கள் துரித வேகத்தில் கற்பிக்கப்பட்டு மொழியினை சரளமாக பேசுவதற்காக சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்பறைச்சுழல், நவீன கற்பித்தல் முறை.
UNIVERSITY OF CAMBRIDGE / CITY & GUILDS / TOEIC /ISO 9001-2008
பாடநெறியினை சிறப்பாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்கள்
10000 ற்கும் அதிகமான மாணவர்கள் பயின்ற பாடநெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி/ஞாயிறு [1.00 -3.30 P.M] 14.09.2013
திங்கள்/புதன் [4.00 - 6.00 P.M] 16.09.2013
IELTS/A1,A2,B1,B2 / FRENCH / DEUTCH பாடநெறிகள் பதிவுகள்
E-CITY College of English & IT Skills Development
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0774924166 / 0773400418 / 0770610271 / 0212217106

# இனப்படுகொலை ஜெனிவாவில் காட்சி; தடுக்க இலங்கை முயற்சி




ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 24-வது கூட்டத்தொடர் ஆரம்பமாகி யுள்ள நிலையில் ஐ.நா. முன்றலில் ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலையை விளக்கும் புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டு வரு கிறது. இது எதிர்வரும் 15-ம் திகதி வரையும், அதன் பின்னர் 23-ம் திகதியிலிருந்து 27-ம் திகதி வரையிலும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்புகைப்படங்களை ஐ.நா.மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் கலந்து கொள்ள வந்திருக்கும் உலக நாடுகளின் பிரதிநிதிகளும் ஜெனிவாவில் உள்ள பொதுமக்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை, இப்புகைப்பட கண்காட்சியை தடை செய்யுமாறு ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூத ரகம் ஜெனிவா பொலிஸாரை கோரியுள்ளது. (செ-11)

# ஜப்பானிய அமைச்சர் இன்று இலங்கை விஜயம்

ஜப்பான் நாடாளுமன்றத்தின் வெளி விவகாரங்கள் தொடர்பான துணை அமைச்சர் மினோரு கியுச்சீ இருநாள் விஜய மொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இலங்கை அரசின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் ஜப்பான் இடையிலான இராஜதந்திர உறவினை வலுப்படுத்தலே இவ்விஜயத்திற்கான நோக்கம் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இவ்விஜயத்தின்போது அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீஎல் பீரிஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்களை சந் திப்பார் என தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

# வீதி அபிவிருத்தி...

காண முடியும் என்று சர்வதேசம் உட்பட பலரும் நம்புகின்றார்கள்.

எனவே இந்தத் தேர்தலில் வடக்கு மக்கள் தமது கட்சியையே ஆதரித்து வாக் களிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (செ-11)

# நவியை எதிர்...

இது தொடர்பில் அமைச்சர் மகிந்த சமர சிங்க மேலும் கூறுகையில்,

இலங்கையின் நிலைமைகள் தொடர் பான விடயங்கள் அடங்கிய அறிக்கை யொன்று எதிர்வரும் 25ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையா ளரினால் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் பருவகால கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் இருவர் தற்போது மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ளனர்.

எமது பிரதிநிதிகளுக்கு ஜெனிவாவிற் கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமை வகிக்கின்றார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கின்ற அறிக்கை எமக்கு பாரிய அழுத்தங்களை உருவாக்கியுள்ளது.

நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக வெளியிட்டிருந்த கருத்துக்களில் பல நிராகரிக் கப்பட வேண்டியவை. உண்மை நிலைகளை அறியாத நிலையிலேயே அவரது அறிக்கை பக்கசார்பாக தயாரிக்கப்பட்டிருக்கும் என நாம் கருதுகின்றோம்.

எனவே ஐ.நா. கூட்டத்தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கும்போது எழும் எந்தவொரு சவா லையும் திடத்துடன் எதிர்கொள்ள இலங்கை தயார்நிலையில் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கை மீது ஜெனிவா கூட்டத் தொடரில் தீர்மானத்தை நிறை வேற்றியபோது இலங்கைக் குழுவுக்கு தலை மையேற்று முக்கிய பங்காற்றியவர் மகிந்த சமர சிங்க என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இலங்கையரிடம்...

மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இலங்கை இறுதி 20 நாடுகளுக் குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் உலகில் மகிழ்ச்சியாக மக்கள் வாழும் நாடுகளில் முதலி டத்தை டென்மார்க்கும் இறுதியில் மாலி, உகண்டா, பலஸ்தீனம், சூடான், சிம்பாவே மற்றும் கெயிட்டி ஆகிய நாடுகளும் காணப்படுகின்றன.

இதேவேளை, இலங்கையில் உள்ள மக்கள் சுனாமி மற்றும் உள் நாட்டு யுத்தங்கள் என்பனவற்றினால் பாதிக்கப்பட்டிருப்பதால் இலங்கை யில் மன அழுத்தம் அதிகமான மக்கள் உள்ளதாக அறிக்கைகள் ஏற் கெனவே தெரிவித்திருந்தன.

அவற்றின் அடிப்படையில் தெற்காசியாவில் மகிழ்ச்சியாக மக்கள் வாழும் நாடுகளில் இலங்கையே இறுதி யாக உள்ளமை குறிப் பிடத்தக்கது. (செ-11)

# பிரபாகரனின்...

சுமத்தினார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற வுள்ள மாகாண சபைத் தேர்தலையொட்டி மாகாணங்களின் பல இடங்களிலும் ஜனாதி பதி, அரசாங்க கட்சி சார்பு வேட்பாளர்களை ஆதரித்து கூட்டங்களில் பரப்புரை செய்து வரு கின்றார். அந்த வகையில் வடமாகாணத் திற்கான அவருடைய முதலாவது கூட்டம் வவுனியா வைரவப்புளியங்குளம் விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலிகளின் தலைவர் பிரபாகரன கோரிய தற்கும் தமிழ்த் தேசியக் கூட டமைப்பு இன்று கூறுவதற்கும் இடையில் எந்த வித்தியாசங் களும இல்லை.

சிலர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞா பனத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நான்கு வருடங்களுக்கு முன்னர் கோரப்பட்டதையே இவர்களும் கோரியுள்ளனர்.

பிரபாகரனுக்கு நாட்டை பிளவுபடுத்த இடமளிக்காதது போல் எவருக்கும் நாட்டை பிளவு படுத்த இடமளிக்க முடியாது.

போர் காரணமாக முஸ் லிம் களும், சிங்களவர்களும் வடக்கில் இருந்து வெளியேற றப்பட்டனர்.

இரண்டு பக்கத்திலும் இருந்த ஜனநாயக தமிழ் தலைவர்கள் கொலை செய்யப் பட்டனர்.

எமது அரசாங்கம் இன வாதத்திற்கு எதிரானது. நாங் கள் சகல மதங்களுக்கும் மதிப்பளித்து வருகின்றோம். அனைவரும் இலங்கையர்கள் என்ற நிலையில் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டில் உள்ள ஏனைய மாகாணங்களுக்கு வழங்கும் சகல நலனகளும் போர் முடி வடைந்த பின்னர் வடக்கு மாகாணத்திற்கும் வழங்கப் பட்டு வருகிறது என்றார். (செ-11)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்
Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
Batch - 1 14.09.2013 | Batch - 2 16.09.2013 | Batch - 3 21.09.2013 | Batch - 4 23.09.2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
கல்வியின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.